பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 18, திங்கட்கிழமை 02.01.2017 கதிர் 58

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.
WELLA Hair Dressing
வெலா சலூன்
Ladies & Gents
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

# சூழ்ச்சியான நடவடிக்கைகள் அரசு எடுக்கப் போகின்றது!



## புத்தாண்டுச் செய்தியில் உருத்திரகுமாரன் எச்சரிக்கை

நியூயோர்க், ஜனவரி 02

**2017 ஆம் ஆண்டு ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு சவால் மிக்க ஆண்டாக அமையப் போகின்றது. இந்த ஆண்டில் பல சூழ்ச்சிகரமான நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுக்கப்போகின்றது. இச்சூழ்ச்சியை நாம் தாயகம், தமிழகம் மற்றும் உலகம் எங்கும் வாழும் தமிழர்களுடனும், நீதிக்காகக் குரல்கொடுக்கக்கூடிய அனைத்துலகச் சமூகத்துடனும் இணைந்து முறியடிக்க வேண்டும்.**

**- இவ்வாறு எச்சரிக்கையும் அழைப்பும் விடுத்திருக்கின்றார் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமரான வி.உருத்திரகுமாரன்.**

புத்தாண்டை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஈழத்தமிழ் மக்கள் அனைவருக்கும் நாடுகடந்த தமிழீழ அர

பக்கம் 20 »

## அமெரிக்கா – இலங்கை ஜனாதிபதிகள் விரைவில் சந்தித்துக் கலந்துரையாடுவர்

*ஜெனீவா தீர்மானம் தொடர்பிலும் ஆராயப்படுமாம்*

கொழும்பு, ஜன.02

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்ப்புக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்

பக்கம் 20 »

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இம்முறையும் இலங்கைக்கு சார்பான தீர்மானம்?

கொழும்பு, ஜன.02

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள்பேரவையின் கூட்டத்தொடரில்இந்தமுறையும் இலங்கைக்கு சாதகமாக தீர்மானம் ஒன்று வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறானதொரு சாதக நிலையைஏற்படுத்துவதற்குஏற்றாற்போலவே இலங்கையின் தற்போதைய சர்வதேசக் காய் நகர்த்தல்கள் இருக்கின்றன என்று 'த சண்டே லீடர்' - பத்திரிகையில்நேற்று வெளியாகிய கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவை வருமாறு:-

எதிர்வரும் மார்ச் மாதம் இடம் பெறவுள்ளஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் தனக்குச் சாதகமான மற்றொரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கான ஆதரவை இலங்கை அரசாங்கம் திரட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகத்தீர்மானம் இயற்றப்பட்டால் அதன் மூலம் நல்லி

பக்கம் 19 »

## அரசில் நீடிப்பதா? வெளியேறுவதா? சு.க. அமைச்சர்கள் இன்று கூட்டம்!

கொழும்பு, ஜன.02

நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து இன்று கூடி ஆராய்கின்றனர்.

மிக முக்கியமான இந்தக் கூட்டத்தில் நல்லாட்சி அரசில் நீடிப்பதா அல்லது அரசை விட்டு வெளியேறுவதா என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவை அவர்கள் எடுப்பார்கள் என்று கொழும்பு செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தின் பின்னர் அரசின் பல முக்கிய பிரமுகர்கள் அரசை விட்டு வெளியேறி கூட்டு எதிரணியில் இணைவர் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டு எதிரணிப் பிரமுகருமான பந்துல குணவர்த்தன உறுதி கூறுகின்றார். (உ)

## அரசமைப்பு நகல் வரைவு தயாரிக்க வழிகாட்டல் குழு 5,6 இல் கூடுகின்றது

கொழும்பு, ஜன. 02

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக அரசமைப்புச்சபையாக மாறியுள்ள நாடாளுமன்றம், அரசமைப்பு நகல்வடிவத்தை உருவாக்குவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 21பேர் கொண்ட அரசமைப்பு வழிகாட்டல் குழு ஒன்றை உருவாக்கியுள்ளது. அந்த அரசமைப்பு வழிகாட்டல் குழு எதிர்வரும் வியாழனும், வெள்ளியும்(5ஆம், 6ஆம் திகதிகளில்) கூடுகின்றது.

அந்தக் கூட்டத்தில் அரசமைப்பு நகல் குறித்து ஓர் இணக்கம் வருமானால் அது, 9,10,11 ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாகக் கூடும் போது அங்கு சமர்ப்பிக்கப்படும்.

மேற்படி அரசமைப்பு வழிகாட்டல்குழுவின் உறுப்பினரும்,

பக்கம் 19 »

## பொருத்து வீடு வேண்டாம்; கல் வீடே வேண்டும்! மக்களை எழுத்தில் கொடுக்கக் கோருகிறார் மாவை

யாழ்ப்பாணம், ஜன.02

"இரும்புக் கூடுகள் எமக்கு வேண்டாம். கல் வீடுகளே வேண்டும்" என்பதை வடக்கு, கிழக்கு மக்கள் எழுத்து மூலமாக மீள் குடியேற்ற அமைச்சுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் எட்டு இலட்சம் ரூபா வீட்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்ற நிலையில், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் இங்கு கல் இல்லை, மணல் இல்லை, நீர் இல்லை என்ற அற்பகாரணங்களைக்காட்டிமக்களை ஏமாற்றுகின்றார் என்றும் மாவை சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசையும் தமிழ் மக்களையும் தவறாக வழிநடத்த வேண்டாம் என்று அமைச்சர் சுவாமிநாதனைக் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் மாவை எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மாவை சேனாதிராசா எம்.பி.

பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்



அப்ப... ஜெனீவாவிலை பழைய குருடி கதவைத் திறவடி என்ட கதைதான் போல...!

## ஜின் – நில்வள கங்கை திருப்புத் திட்டம்

## வேலை எதுவும் நடக்காமலேயே 401 கோடி ரூபா கொடுப்பனவு!

*நிதி அமைச்சர் அதிர்ச்சித் தகவல்*

கொழும்பு, ஜன.02

ஜின் – நில்வள கங்கைகளின் திருப்புத் திட்டத்தின் கீழ், எந்த வேலையும்முன்னெடுக்கப்படாமலேயே சீன ஒப்பந்தகாரர் ஒருவருக்கு அரசு 401 கோடி ரூபா செலுத்தியிருக்கின்றது.

இந்த அதிர்ச்சித் தகவலை கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வெளியிட்டார் என அறியவருகின்றது.

ஜின் கங்கை, நில்வள கங்கை ஆகியஆறுகளில்ஓடிவரும்நீரை தென் மாவட்டங்களான அம்பாந்தோட்டை, மாத்தறைக்குத் திருப்பி குடி தண்ணீர், விவசாயம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதே இந்தத் திட்டமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்

பக்கம் 19 »

## ரூ.8 ஆயிரத்து452 கோடிக்கு புதிய நாணயத் தாள்கள் தயார்!

*விரைவில் மக்களின் புழக்கத்துக்கு*

கொழும்பு, ஜன.02

இலங்கை மத்திய வங்கி 8 ஆயிரத்து 452 கோடி ரூபா பெறுமதியான புதிய நாணயத் தாள்களை கடந்த வெள்ளிக்கிழமை அச்சிட்டிருக்கின்றது. கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் இந்த நாணயத்தாள் அச்சிடும் பணிகள் நடைபெற்றுள்ளன.

விரைவில் இந்த நாணயத் தாள்கள் மக்களின் புழக்கத்திற்கு விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்புதியநாணயத்தாள்கள்

பக்கம் 19 »

# உள்ளூராட்சித் தேர்தலில் மைத்திரி - மஹிந்த கூட்டு?

## கைச் சின்னத்தில்இணையும் சாத்தியம்

கொழும்பு, ஜன.02

உள்ளூராட்சித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தரப்பும் முன்னாள் ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷவின் தரப்பும் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று கொழும்புச்செய்திகள்தெரிவிக்கின்றன.

தனித் தனியாக தேர்தலில் போட்டியிட்டால் இரண்டு தரப்புக்கும் அது அரசியல் ரீதியான அழிவை உருவாக்கும் எனவும் இதனால் கூட்டாக இணைந்து போட்டியிடவேண்டியதுஅவசியம் என்றும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எதிர்வரும்2020ஆம்ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி ஒன்றை நிறுவும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

இரண்டு தரப்பும் ஒன்றிணைந்து செயற்படுவதில் பெரியளவில் அரசியல் சிக்கல்கள் கிடையாது.

கடந்த பொதுத் தேர்தலைப் போன்றேபோட்டியிட்டு, ஒருவரது காலை மற்றவர் வாராது ஒன்றிணைந்துதேர்தலைச்சந்திப்பதன் மூலம் வெற்றியீட்ட முடியும்.

அதன் அடிப்படையில் மைத்திரி - மஹிந்த தரப்புகளுக்கு இடையில் பேச்சு முன்னெடுக்கப்படவுள்ளது. ஏற்கனவே இது குறித்த சில ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமல்ராஜபக்ஷவுக்கு உயர்பதவியொன்றை வழங்கி, இரு தரப்புக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.-என்றார்.

இதேவேளை, இந்த விடயங்கள்தொடர்பில்மைத்திரிதரப்போ மஹிந்த தரப்போ உத்தியோக பூர்வமாக எந்த விடயத்தையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அலுவலக கடமைகளை ஆரம்பித்தல்


யாழ்ப்பாணம், ஜன.02

நல்லூர் பிரதேச செயலகத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான கடமைகளைஆரம்பித்தல்நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை9மணிக்குஇடம்பெறவுள்ளன.

இதன்போதுஅலுவலகபிரதான வாயிலில் காலை 9 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதமும் இசைக்கப்படும். இதன் பின்னர் இடம்பெறும் மௌன அஞ்சலியைத் தொடர்ந்து உத்தி யோகத்தர்களின் உறுதிமொழி எடுத்தல் நிகழ்வும் சமயப் பெரியார்களின் ஆசியுரையும் தொடர்ந்து பிரதேச செயலரின் உரையும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் 'நிலைபேறான நோக்கு' நேரடியாக ஒளிபரப்புசெய்யப்படும். அதன் பின்னர் உத்தியோகத்தர்களின் நிகழ்வுகளும்இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து சேவை உடன்படிக்கை வழங்கல் நடைபெறும். (ஐ-32)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற புதுவருட ஆராதனையின் போது...

# 'எட்கா' உடன்படிக்கை இப்போதைக்கு இல்லை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும்இடையிலானபொருளாதார, வர்த்தக ஒத்துழைப்பு ஒப்பந்தம் ('எட்கா' உடன்படிக்கை) தற்போதைக்கு கைச்சாத்திடப்படமாட்டாதுஎன்றுதெரிவிக்கப்படுகிறது.

2016 டிசெம்பர் மாதம் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்என்றுமுன்னதாகஅறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த உடன்படிக்கை தொடர்பில் இந்தியாவுடன்சிலசுற்றுப்பேச்சுக்களை நடத்த வேண்டியிருப்பதால் உடன்படிக்கை கைச்சாத்திடும் நடவடிக்கை காலம் தாழ்த்தப்படவுள்ளது.

இது தொடர்பில்சர்வதேசவர்த்தகஅமைச்சர்மலிக்சமரவிக்ரம தகவல் வெளியிட்டுள்ளார்.

உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் குறித்து இந்திய உயர் அதிகாரிகளுடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. பேச்சுக்களின் பின்னர் எப்படியும் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

'எட்கா' உடன்படிக்கைக்குச் சமாந்தரமாக சீனா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனும் விசேட வர்த்தக உடன்படிக்கைகள் இந்த ஆண்டில் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 16 பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக ஆணைக்குழுவில் 26 முறைப்பாடுகள்

வடமாகாணத்தில் உள்ள பொலிஸ்நிலையங்களுக்கு எதிராககடந்த வருடம் (2016) மொத்தம் 26 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ளதேசியபொலிஸ்ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் பணிப்பாளர் கலாநிதி கந்தையா தியாகராஜா நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நெல்லியடி, அச்சுவேலி, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, மானிப்பாய், வவுனியா, தெல்லிப்பளை, மல்லாவி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கிளிநொச்சி, கொடிகாமம், மாங்குளம், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, காங்கேசன்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்குஎதிராகஇந்தமுறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் பொதுமக்கள் ஒரு சிலர் தமது பிரச்சினைகளைப் பற்றி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்.

இருந்தபோதும், எந்தவிதமான நடவடிக்கைகளும் பொலிஸ் நிலையங்களால் மேற்கொள்ளப்படவில்லை என்ற முறைப்பாடே இந்தப் பொலிஸ் நிலையங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளன.

இந்த 16 பொலிஸ் நிலையங்களில், கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்கு எதிராக 5 முறைப்பாடுகளும், வவுனியா பொலிஸ்நிலையத்துக்குஎதிராக 6 முறைப்பாடுகளும் உட்பட மொத்தம் 26 முறைப்பாடுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் அந்தந்தப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு அவற்றில் 20 முறைப்பாடுகளுக்கு தீர்வு பெறுநூக்கொடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக் குழுவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# அரிசி விலையை 20 ரூபாவால் குறைக்க நிதி அமைச்சு முயற்சி

தற்போது விற்பனை செய்யப்படும் அரிசியை 20 ரூபாவிலை குறைவாக நுகர்வோருக்கு வழங்க முடியும் என்று நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுங்க வரி இல்லாமல் அரிசி இறக்குமதி செய்வதற்குத் தனியார் துறையினருக்கு அரசு அனுமதிவழங்கியுள்ளதால்இவ்வாறு விலை குறைவாக அரிசியை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.


இந்த விலைக் குறைப்பு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி, சுங்க வரி இல்லாமல் இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அரிசி ஜனவரி முதலாம் வாரத்திலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

பெரும்போகத்தின் போது வறட்சி எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் நெற் பயிர்ச் செய்கையை குறைத்துள்ளனர். அச்சூழலில் அரிசி வியாபாரிகள் அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதால், அதனைத் தடுக்கும் நோக்கிலேயே அரசு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

அதேவேளை சந்தையில் தற்போது அரிசியின் விலை பெரியளவில்உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# மின் தடை அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், ஜன.02

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைசெவ்வாய்க்கிழமைமின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி செவ்வாய் காலை 8.30 மணியளவில் இருந்து 5.30 மணிவரையும் யாழ். பிரதேசத்தில் புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய இடங்களிலும், -

வவுனியா பிரதேசத்தில் ஓமந்தை வீட்டுத்திட்டம், ஐ.சி.ரி. கல்லூரி, யூனியன் அலயன்ஸ் லிமிட்டெட் ஆகிய இடங்களிலும், -

மன்னார் பிரதேசத்தில் எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திட்டம், கொன்னயன்குடியிருப்பு, கடலோரி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# ஊர்காவற்துறையில் வீடுகள் அமைக்கும் பணி பூர்த்தியானது

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற 101 நிரந்தர வீடுகளின் கட்டுமானப்பணி நிறைவு பெற்றுள்ளது என பிரதேச செயலர் திருமதி அன்ரன் எழிலரசி யோகநாயகம் தெரிவித்தார்.

எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் இவ்வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. பயனாளிகள் தமதுவீடுகளைத்தாங்களாகவே கட்டி முடித்தனர் என்பது ஒரு மகிழ்ச்சியான விடயம். 15 கிராம சேவையாளர் பிரிவுகளில் 8 கிராமசேவையாளர் பிரிவுகளில் இவ் வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் அடிப்படையில் கணவனை இழந்த குடும்பம், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பம், அங்கவீனமுற்றோர் போன்றவர்கள் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வீடுகள் வழங்கப்பட்டன எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார். அவற்றில் அதிகளவான வீடுகளை எந்த விதமான கூலியும் இன்றி பயனாளிகளே கட்டி முடித்தனர் என்பதும் பெருமையான விடயம் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (ம)

# ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஜன.02

'ஆறுதல்' நிறுவனத்தின் 'BLOSSOMS' ஆரம்பப் பிள்ளைப் பருவஅபிவிருத்திப்பயிற்சிநிலையத்தின் ஆரம்ப விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

'ஆறுதல்'நிறுவனபிரதமநிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி, வட மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் த. ஜெயக்குமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், யாழ். வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம்ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், வண. அருட்தந்தை க.டேமியன் ஆகியோர் நிகழ்த்துவர். (ஐ)

# டிக்கோயாவில் 3 ஆலயங்கள் வருடம் பிறந்த சமயத்தில் சூறை!

## கானொளியில் பதிவான திருட்டு

கொழும்பு, ஜன.02

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டிக்கோயா பகுதியின் டிக்கோயா அம்மன் ஆலயம், வனராஜா மேல்பிரிவு மருத வீரன் ஆலயம், வனராஜா விநாயகர் ஆலயம் ஆகியவை நேற்று வருடம் பிறந்த சமயம் அதிகாலை வேளை சூறையாடப்பட்டிருக்கின்றன.

டிக்கோயா வனராஜா ஆலயத்தில் திருடன் கைவரிசையைக் காட்டிய சமயம் ஆலயத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராவில் அத்திருடனின் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றது. அதனால் திருடனைக் கைது செய்வது உறுதி என்று பொலிஸார் நம்புகின்றனர்.


அம்மனுக்குச் சாத்தப்பட்டிருந்த தங்கத் தாலியுடன் கூடிய சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பிள்ளையாருக்குச் சாத்தப்பட்டிருந்த வெள்ளி அங்கி மற்றும் மருதவீரன் ஆலய உண்டியல் ஆகியனவே சூறையாடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட நபர் மேலும் பல திருட்டுக்கள் தொடர்பாகத் தேடப்பட்டு வருபவர் என்று கூறப்படுகின்றது.

திருடும் போது அந்த நபர் தொலைபேசியில் உரையாடிக் கொண்டே திருடுவதால் இந்தச் சம்பவத்துடன் பலர் தொடர்புபட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (உ)

# வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் சனசமூக நிலையம் எரிந்து நாசம்!

## பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் அழிவு!!



வடமராட்சி கிழக்கு உடுத்துறை(வேம்படி) முத்தமிழ் சனசமூக நிலையம் நேற்று அதிகாலைவேளை, முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது. அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளும் தீக்கிரையாகி விட்டன.

சனசமூக நிலையத்தில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிளாஸ்ரிக் கதிரைகள், அலுமாரிகள், மேசைகள் மற்றும் தளபாடங்கள் வேம்படி ஒடு மீன் விளையாட்டுக்கழகத்தின் சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள், கழகத்தின் ஆவணங்கள் அனைத்தும் எரிந்து கருகி நாசமாகி விட்டன.

இவற்றைவிட முத்தமிழ் முன்பள்ளியின் தளபாடங்கள், விளையாட்டுப் பொருள்கள் எல்லாமே அழிந்து போய் விட்டன.

சுமார் 10 லட்சம் ரூபா வரையிலான நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சனசமூக நிலையம் எவ்வாறு தீப்பிடித்தது என்பது குறித்து சரியான தகவல் ஏதும் தெரியவில்லை. நிலையம் பற்றி எரிவதைக் கண்ட கிராம மக்கள் தீயை அணைக்க எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை ஒரு மணிக்கும் 3 மணிக்கும் இடையில் தீ வைப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்றும் இது ஒரு நாசகார செயல் என்றும் கிராம மக்கள் கூறுகின்றனர்.

சம்பவம் குறித்து பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, நேற்று முற்பகல் மோப்ப நாய்களுடன் வந்து விசாரணைகளை பொலிஸார் நடத்தினர். (இ-35)

# அதிக கடன் பெற்றுள்ள நிறுவனமாக 2016 இல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

2016 ஆம் ஆண்டு வணிக வங்கிகளில் அதிகளவான கடன் பெற்ற நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை பெயரிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் நிறுவனம் பெற்றுக் கொண்டுள்ள கடனின் பெறுமதி 561 கோடி ரூபா என்று தெரியவந்துள்ளது.

அந்தப் பட்டியலில் 400 கோடி ரூபா கடன் பெற்ற நிறுவனமாக இலங்கை உர நிறுவனம் பெயரிடப்பட்டுள்ளது.

மூன்றாம் இடத்தைக் கொழும்பு வர்த்தக உர நிறுவனம் பெற்றுள்ளது. அந்த நிறுவனம் 400 மற்றும் 340 கோடி ரூபாவரைக் கடன் பெற்றுள்ளது.

இதேவேளை, கடன் பெற்ற பட்டியலில் நான்காம் இடத்தைக் கப்பல் நிறுவனம் பிடித்துள்ளது. அதன் கடன் பெறுமதி 340 கோடி ரூபா என்று குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி அறிக்கைகளுக்கமைய 2016 ஆம் ஆண்டின் முதல் 8 மாதத்தில் மாத்திரம் அரச கூட்டுத்தாபனங்கள் வணிக வங்கிகளில் 8 ஆயிரத்து 150 கோடி ரூபா கடன் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

### மீள் குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில்

# யாழ்.முஸ்லிம் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் துரிதம்

மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக்கமைய யாழ்.முஸ்லிம் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் உள்ளக வீதிகள் புனரமைப்பு, ஒஸ்மானியாக் கல்லூரி, கதீஜா மகளிர் கல்லூரி, பொம்மை வெளியில் கழிவு நீர்த்தாங்கிகள் அமைத்தல், மீள்குடியேறுவோர்களுக்கான காணித்துப்புரவு மற்றும் வேலணை மண்கும்பான் பள்ளிவாசல் அபிவிருத்திக்கென 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்தி வேலைகளை யாழ்.பிரதேச செயலகமும், மாநகர சபையும் மேற்கொண்டு வருகின்றன.

வேலணை மண்கும்பான் பள்ளிவாசல் அபிவிருத்திப் பணிகளை வேலணைப் பிரதேச செயலாளர் மூலம் பள்ளித் தலைவர் மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான பி.ஏ.சுபியான், பி.எஸ்.எம்.சரபுல் அனாம் மற்றும் ஏனையோரின் முன்மொழிவுக்கமைய மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் இராமநாதன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்த அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்திப் பணிகள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மீள் குடியேறி வாழும் அனைத்து முஸ்லிம் மக்களும் அரச அதிகாரிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் எமது பிரச்சினைகள் ஓரளவு தீர வழிவகுக்குமென மக்கள் தெரிவிக்கின்றனர். (இ-19)

# யாழ். மாநகர சபையின் தற்காலிக பணியாளரை நிரந்தரமாக்குவதில் பிரச்சினை எதுவும் இல்லை

## வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ். மாநகர சபையின் தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை நிரந்தரமாக்கும் விடயத்தில் பிரச்சினைகள் எதுவும் இல்லை என்று வடமாகாண சபை உறுப்பினரும், உள்ளூராட்சி அமைச்சு விடயங்களை கையாளும் அங்கீகாரமளிக்கப்பட்ட உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையில் தற்காலிக சுகாதாரப் பணியாளர்களாகக் கடமையாற்றும் ஊழியர்கள் 197 பேர் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி கடந்த மாதம் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் உள்ளூராட்சி அமைச்சும், அந்த அமைச்சு சார் விடயங்களைக் கையாளும் அங்கீகாரம் அளிக்கப்பட்ட உறுப்பினருமான சிவாஜிலிங்கம் சுகாதாரப் பணியாளர்களுடன் பேச்சு நடத்திக் கால அவகாசம் கேட்டு குறித்த போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இதேவேளை, அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் விடயம் என்ன நிலையில் உள்ளது? என்று ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வர்த்தக நிலையங்களின் கழிவுகள் மற்றும் விலங்குக் கழிவுகளை அகற்றும் பணி தனியாருக்கு வழங்கப்படுவதிலும் பிரச்சினை எதுவும் இல்லை.

197 தற்காலிக ஊழியர்களில் 39 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. இதேபோல் மற்றையவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக பேச்சுநடத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக மேற்படி ஊழியர்கள் 10 நாள்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் மேற்கொண்ட காலத்துக்கான சம்பளம் வெட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 20ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையான நாள்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வெட்டப்பட்ட சம்பளத்தைக் கடனடிப்படையில் வழங்கவேண்டும் என்று முதலமைச்சர் மற்றும் மாநகரசபை ஆணையாளருடன் பேசியிருக்கின்றேன். அது தொடர்பாகஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

வர்த்தக நிலையங்களின் கழிவுகளை அகற்றுவதற்கும், விலங்குக் கழிவுகளை அகற்றுவதற்கும் தனியார் துறையிடம் இருந்து கேள்வி கோரல் விடுக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக நான் மாநகரசபை ஆணையாளர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேசியிருக்கின்றேன்.

இதன்போது ஆணையாளர் தனியார் துறையிடம் கொடுக்கப்படுவதனால் மாநகரசபை ஊழியர்கள் குறைக்கப்படமாட்டார்கள் அவர்களுக்கு பாதிப்புக்கள் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

தொழிற் சங்க பிரதிநிதிகளிடம் இந்த விடயம் தொடர்பாக மாறுபட்ட கருத்து உள்ளது.

ஆனால், நான் விடயத்தைச் சரியாக அவர்களுக்கு கூறியிருக்கின்றேன். அதாவது, தனியார் துறையிடம் கொடுப்பதால் எந்தப் பாதிப்பும் இல்லை.

எனவே, இந்த விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு பாதிப்பில்லாமல் தீர்வு காணப்படும். அதேவேளை, மாநகர சபைக்குள் வேறு வேலைகளுக்கும் பணியாளர்கள் இல்லாமையால் வெற்றிடங்கள் உள்ளன.

வெற்றிடங்களுக்கு அவர்களில் பொருத்தமானவர்களை இணைத்து, நிரந்தர நியமனத்தை வழங்குவது தொடர்பாகப் பேசுகிறோம்.

இந்த மாத பிற்பகுதியில் முதலமைச்சர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாநகர சபை அதிகாரிகளுடன் நடக்கும் கலந்துரையாடலில் நல்ல முடிவுகள் எட்டப்பட உள்ளன.-என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மஹிந்தரின் சித்து விளையாட்டுக்கு பதமாக இருக்கும் தெற்கு அரசியல்

பிறந்துள்ள இந்த ஆண்டில் ஆட்சியைக் கவிழ்த்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவதே தனது திட்டம் என்பதைப் புத்தாண்டு பிறப்பதற்கு முன்னரே அறிவித்து, பரபரப்பை ஏற்படுத்தினார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தமது உள்ளக்கிடக்கை என்னவென்பதை அவர் வெளிப்படுத்தி விட்டார்.

அந்த அறிவிப்புக் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், மஹிந்த ராஜபக்ஷவால் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது என்றும், அதற்கு மக்கள் ஒரு போதும் ஆதரவு வழங்கமாட்டார்கள் என்றும் கூறியிருக்கின்றார்.

மஹிந்தவின் கூற்றில் இரண்டு விடயங்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்று - ஆட்சியைக் கவிழ்த்தல். அடுத்தது - அதிகாரத்தைக் கைப்பற்றுதல்.

இன்றைய நிலையில், நேரடியாக ஆட்சிக் கவிழ்ப்புக்காக அவர் மக்களிடம் செல்ல முடியாது. அப்படி மக்கள் அனுமதியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவதாயின், மட்டுமே தற்போதைய அரசு தானாகவே கவிழ்ந்து நேரத்துடனேயே ஒரு பொதுத்தேர்தலை நடத்த முன் வந்தால் அதற்கு அவருக்கு வாய்ப்புக் கிட்டும்.

அப்படி இல்லையாயின், தேசிய ரீதியில் ஒரு தேர்தலில் (உதாரணத்துக்கு நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில்) அமோக வெற்றியைத் தனதாக்கி, அதன் மூலம் ஆட்சித் தரப்புக்குள் அரசியல் நெருக்கடியை உருவாக்கி, ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும்.

அடுத்தது - அதிகாரத்தைக் கைப்பற்றுதல். ஒரு பொதுத் தேர்தல் நடத்தப்படாமல் அதிகாரத்தைத் தம் வசமாக்குவதற்கு மக்கள் அனுமதியை அவர் பெறமுடியாது.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றமை போல, இந்த ஆட்சியை மஹிந்த ராஜபக்ஷ கவிழ்த்து, அதிகாரத்துக்கு வருவதற்கு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற விடயம் இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமற்றதே.

இன்றைய நிலையில் மக்களிடம் போய், அவர்கள் அனுமதி மூலம் ஆட்சியைக் கவிழ்க்கவோ, அதிகாரத்தைக் கைப்பற்றவோ மஹிந்தவால் இயலப்போவதில்லை. அவர் மக்கள் அனுமதி பெறுவதை மனதில் வைத்துத் தமது இலக்குக் குறித்து அறிவிக்கவுமில்லை. அதற்குச் சாத்தியமும் இல்லை.

மக்களிடம் நேரடி அனுமதிக்குப் போகாமல், மக்கள் ஆதரவு தம்பக்கம் இருக்கின்றது என்ற வழமையான அரசியல்வாதிகளின் மந்திரக் கூற்றைத் தனதாகவும் வைத்துக் கொண்டு, அரசியல் சாணக்கிய காய் நகர்த்தல்கள் மூலமே அந்த இலக்கை நோக்கி அவர் நகர முயல்வார் என்பது வெளிப்படையே.

அப்படி அவர் அரசியல் சாணக்கியத்தனத்தைப் பிரயோகிக்கக் கூடிய பதத்தில்தான் தென்னிலங்கை அரசியல் - கொழும்பு அரசியல் - வசமாக இருக்கின்றது என்பதும் மறுக்கக் கூடியதல்ல.

நல்லாட்சி அரசுக்கு இப்போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறக் கூடிய வலிமை இருக்கின்றது என்பது உண்மைதான். எனினும், அந்த அரசு பலமானதாக, வலிமையானதாக உள்ளதா என்று பார்த்தால் அது சந்தேகமே. ஆட்சித் தரப்புக்குள் நெருக்கடிகளும், உள்வீட்டுக் குழப்பங்களும், குத்து வெட்டுக்களும் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டன. 'நல்லாட்சி அரசு' என்ற பெயரில் ஒட்டுப் போட்ட ஐ.தே.கட்சியினரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும் கீரியும் பாம்புமாகவே இருக்கின்றனர்.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பிக்களின் அரைவாசி எண்ணிக்கையானோர் கூட்டு எதிரணி என்ற பெயரில் வெளிப்படையாகவே அரசுக்கு ஆப்பு வைக்கக் காத்து நிற்கின்றனர்.

அரசிலிருக்கும் எஞ்சியோரும் மதில் மேல் பூனையாகவே உள்ளனர்.

எனவே, 'நல்லாட்சி அரசின்' நாடாளுமன்ற வலிமை, அப்படி ஒன்றும் பலமானதல்ல.

இந்தச் சூத்திரம்தான் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் சித்து விளையாட்டு எதிர்பார்ப்புக்கு வாய்ப்பானதாக இருக்கின்றது.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் சர்வதேச அழுத்தத்தை எதிர்கொண்டிருக்கும் நல்லாட்சி அரசும், ஜனாதிபதி மைத்திரிபாலவும் அதன் காரணமாக இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

அதனையே துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி,இனவாதத்தைக் கிளறி, பௌத்த - சிங்கள மேலாதிக்க வெறியை உசுப்பேத்தி, அதன் மூலம் தென்னிலங்கையைக் கலங்கடித்து, ஆட்சியைக் கைப்பற்ற மஹிந்தர் நிச்சயம் எத்தனிப்பார் என்பது நிச்சயமே.

அதை முறியடிக்கக் கூடிய தயார் நிலையில், கட்டமைப்பு ரீதியிலும், தலைமைத்துவ மாண்பிலும், செல்வாக்கு வலிமையிலும், தந்திரோபாய சாணக்கிய மார்க்கங்களிலும், நல்லாட்சித் தலைமை வலிமையாக உள்ளதா என்று பார்த்தால், அது சந்தேகமே.

எனவே, மஹிந்தருக்கு வாய்ப்பான சூழ்நிலை உருவாகாது என்று இப்போது அடித்துக் கூறும் நிலைமை இல்லை என்பது தான் உண்மை; நிஜமும்கூட.




# பௌத்த தீவிரவாதத்தைத் தூண்டி ஆட்சி மாற்றத்துக்கு மஹிந்த முயற்சி

### கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.02


சிங்கள, பௌத்த தீவிரவாதத்தைத் தூண்டி, தமிழ் மக்களுக்கு எதிரான இனத்துவேசத்தை வளர்த்து, அதனூடாக ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருகின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவினுடைய இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அரசு எவ்வாறான மாற்று நட வடிக்கை எடுக்கப் போகின்றது என்பது கேள்வியாக உள்ளது என அவர் கூறியுள்ளார்.

ஈ.பி.ஆர்.எவ். கட்சியின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் செவ்வியில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

''தற்போதைய அரசைக் கவிழ்த்து, தான் மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் அல்லது தனது கட்சியைச் சேர்ந்தவர்கள் வர வேண்டும்என்றதேவை மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளது.



அத்துடன் தன்னையும் தனது குடும்பத்தையும் பாதுகாக்க வேண்டிய தேவையும் அவருக்கு உள்ளது.

அவரது குடும்பத்தின் மீது கொலை முயற்சி மற்றும் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றியமை, பெரியளவிலான ஊழல் போன்ற குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. இவ்வாறான சூழ் நிலையில் அரசைக் கவிழ்ப்பதன் ஊடாகவே தனது குடும்பத்தைப் பாதுகாக்க முடியும்.

விடுதலைப் புலிகளை அழித்த மாவீரன் என்றதொரு தோரணையைக் காட்டி, தங்கள் பக்கத்திலே மக்கள் சக்தி அதிகாரம் உள்ளது என்று மஹிந்த ராஜபக்ஷ காட்ட முனைகின்றார்.

இதன் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியனவற்றை அச்ச நிலைக்குள் வைத்திருப் பதற்கும் அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.''- என்றார்.

# அரச வைத்தியசாலை நோயாளரின் குருதியை வெளியில் பரிசோதனை செய்வதற்குத் தடை



### சுகாதார அமைச்சு நேற்றுமுதல் அதிரடி நடவடிக்கை

கொழும்பு, ஜன.02

அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு தனியார் வைத்தியசாலைகளில் இரத்தப் பரிசோதனை செய்வது நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைச்சு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''கடந்த 31 ஆம் திகதி அரசால் சகல பரிசோதனைக் கூட வசதிகளும் உள்ள வைத்தியசாலைகளுக்கும் இரத்தப் பரிசோதனை செய்யும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அரச வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளர்களின் இரத்தப் பரிசோதனைகள் தனியார் பிரிவினரால் மேற்கொள்ளப் படுவதாகத் தெரிய வந்தது.

இதையடுத்து நேற்று முதல் அரச வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நட வடிக்கை எடுக்கப் படவுள்ளது.

மேலும் அனைத்து அரச வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கும் இது தொடர்பில் விசேட சுற்றறிக்கை ஒன்றை அனுப்புமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் அனுர ஜெயவிக்ரமவுக்கு, அமைச்சர் ராஜித சேனாரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.''-என்று தெரிவிக்கப் பட்டது. (எ)

### நாளை

03.01.2017
செவ்வாய்க்கிழமை
திதி : பஞ்சமி பி.ப. 2.07 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப- 3.59 வரை
சுபநேரம்:11.00–12.30
இராகுகாலம் : 3.30– 5.00

### மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் மனம் திறக்கிறார்:

# சற்றுப் பொறுங்கள்; பதவி விலகத் தயார்! இம்மாதத்தில் மூன்று முக்கிய நிகழ்வுகள்!!

## அவற்றையும் அவதானித்து முடிவு எடுப்பதே சிறந்தது

வவுனியாவில் கடந்த செப்ரெம்பர் மாதம் மக்களுடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அங்கு அவர்கள் கேட்ட கேள்விக்கு-

01.01.2017 அன்று தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கப் பெறாவிட்டால்,தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் எம்.பிக்கள், மாகாண சபை உறுப்பினர்கள்என அனைவரும் பதவி விலக வேண்டும் எனக் கோரியிருந்தேன்.

அது குறித்து எனது நண்பர்கள் சிலர் கேள்வி கேட்கத் தொடங்கி யுள்ளனர். அவர்களுக்காகவும் எனது ஆதரவாளர்களுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் சில விடயங்களைக் கூற வேண்டும்.

அதற்காகவே இந்தப் பகிரங்க மடலை வரைகிறேன்.

அன்பார்ந்த தமிழ் மக்களே!

முதலில் என்னைப் பற்றிக் கூறி விட்டுப் பின்னர் விடயத்துக்கு வருகின்றேன். நான் பூர்வீக விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன். எனது ஆரம்பக் கல்வியை நெடுங்கேணி மகாவித்தியாலயத்திலும் பின்னர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, இலங்கை விவசாயக் கல்லூரி குண்டசாலை ஆகியவற்றில் கல்வி கற்று விவசாயத் திணைக்களத்தில் கடமையாற்றிகொண்டிருந்தபோது24.12.1983 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை கழகத்தில் இணைந்து கொண்டேன்.

போராளியாக இருந்த கால கட்டத்தில், இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் போது இந்திய அமைதிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு சுமார் ஒன்றரை வருட காலமாக எனது கட்சி உறுப்பினர்கள் 20 பேருடனும் சிறைவாசம் அனுபவித்தேன். அதன் பின்னர் விடுதலையாகி அரசியல் பணிகளில் ஈடுபட்டு 1994 ஆம் ஆண்டில் இருந்து 1999 ஆம் ஆண்டு வரை வவுனியா நகர சபையின் தலைவராகக் கடமையாற்றி உள்ளேன்.

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்கின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வட மாகாண சபை உறுப்பினராகத் தெரிவாகினேன். இன்று வரை அரசியலை விட்டு விலகாமலும் வெளிநாடுகளுக்குச் செல்லாமலும் கட்சி மாறாமலும் தற்போது நெடுங்கேணியில் எனது குடும்ப உறுப்பினர்களுடன் வாழ்ந்து வருகின்றேன்.

மேற்கூறிய விடயங்கள் யாவும் எனது பெருமைகளைப் பறை சாற்றுவனவாக அல்ல. எமது இன விடுதலைப் போராட்டத்தில் தற்போது இருக்கின்ற எல்லா ஆரம்பகால உறுப்பினர்களுடன் ஒப்பிடும்போது நானும் ஒருவனாவேன். எனக்குத் தனிப்பட்ட முறையில் கடமையும், உரிமையும் இருக்கின்றன.

**தமிழ் மக்களுக்கான அவசியம் தேவை**

எமது மக்களுக்கான ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதோடு பாதிப்படைந்த எமது பிரதேசத்தைக்கட்டிஎழுப்பி மக்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டு வருதல் வேண்டும். இதுவே இன்று இருக்கக் கூடிய தமிழ் மக்களின் அவசிய தேவையாக அமை கின்றது.

இனி விடயத்துக்கு வருகின்றேன்.

கடந்த செப்ரெம்பர் மாதம் வவுனியாவில் நடைபெற்ற பொது மக்களுடனான சந்திப்பின்போது அவர்களால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு-

01.01.2017 அன்று தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கப்பெறாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள்என அனைவரும் பதவி விலக வேண்டும் எனக் கோரியிருந்தேன். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தலைமைகளால் எமக்கு வழங்கப்படுகின்ற உறுதி மொழிகள் 2016 ஆம் ஆண்டுக்கு எமது இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான சர்வதேச சூழல் உருவாகி உள்ளதாக எங்களுக்குச் சொல்லப்படுகின்றது.

அவ்வாறு 2016 இற்குள் தீர்வு கிடைக்காவிடின் மக்கள் எங்களுக்கு அளித்த ஆணைகளின் பிரகாரம் நாம் எல்லோருமாகப் பதவி விலகி, இந்த அரசை மிகப் பெரிய இக்கட்டான நிலைக்கு இட்டுச் சென்று சர்வதேசத் துக்கு எமக்கு ஏதுவான நிலைமையை ஏற்படுத்துவதாக அமையும் என்றே நான் இவ்விடயத்தைக் கூறியிருந்தேன்.

ஒரு சில நண்பர்கள் (முகநூல்) ''இப்பிடித்தான் ஒரு தடவை ஓர் எம்.பி பதவி விலகுவேன் எனக் கூறி பதவி விலகவில்லை'' ஆனால் இவர் மட்டும் விலகுவாரா? என்ன? என்ற கேட்கின்றார்கள்.

**எதற்கும் நான் பின்வாங்க மாட்டேன்**

நான் பதவி விலகுவேன் எனும் உறுதியில் தான் எல்லோரையும் பதவி விலக வேண்டும் என கூறியிருந்தேன். நான்மட்டும் பதவி விலகுவதால் இந்த இலங்கை அரசு ஒரு நெருக்கடியைச் சந்திக்கும், சர்வதேசம் எங்களுக்கு உதவி செய்யும் என்று நீங்கள் நம்புவீர்களாயின் நான் பதவி விலகுவதில் பின் வாங்க மாட்டேன்.


பதவி விலகல் சம்பந்தமாக ஏற்கனவே எனக்கு ஓர் அனுபவம் உண்டு. வவுனியாவில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற நகர சபைத் தேர்தலில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் சார்பில் எனது தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எஸ்.என். ஜி.நாதன் தலைமையிலும் மேலும் பல அரசியல் கட்சிகள் தேர்தலைச் சந்தித்து எம்மை விட வெறும் 141 வாக்குகள் வித்தியாசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நகர சபையின் அதிகாரத்தைக் கைப் பற்றியது.

இருந்தும் தேர்தலுக்குப் பின்னர் ஒரு வருட காலமாக நான் உறுப்பினராக இருந்து முடிந்த அளவுக்கு வவுனியா மக்களுக்கு ஏதாவது உதவ வேண்டும் என்பதற்காக நான் கடமையாற்றி இருந்தேன். அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களின் வினைத்திறன் அற்ற செயற்பாடு காரணமாக ஒரு வருடத்தில் யாரிடமும் அனும்தியோ ஆலோசனையோ பெறாமல் நான் அந்தப் பதவியை இராஜினாமாச் செய்தேன். இதனால் எனது கட்சிக்குள்ளும் எனது தேர்தல் வெற்றிக்காக உழைத்த-வேலைசெய்த வாக்களித்த உறவுகள் - ஆதரவாளர்கள், நண்பர்கள், ஆலோசகர்கள் எனப் பலரும் இன்றும் என் மீது கோபத்தில் உள்ளனர்.

வவுனியாவில் இருக்கின்ற எனது தேர்தல் வெற்றிக்காகச் செயற்பட்ட என்னுடைய அரசியல் பயணத்தின் போது ஆதரவு அளித்த ஆதரவாளர்களுடன் முக்கிய சந்திப்பை ஏற்படுத்தி அவர்களுடைய கருத்துக்களை பெற்று நான் பதவி விலகல் தொடர்பாக அறியத் தருவேன்.

ஏனெனில் என்னைத் தெரிவு செய்தவர்கள் வவுனியா மக்களே! நான் நகர சபையில் (2009 ஆம் ஆண்டு) கடமையாற்றிய போது செய்த தவறை மீண்டும் செய்ய விரும்பவில்லை. ஆனால், ஒட்டு மொத்த மாகத்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் உள்ளவர்கள் அனைவரும் பதவி விலகுபவர்களாக இருந்தால் நான் வவுனியா மக்களைக் கேட்க வேண்டிய தேவை ஏற்படாது என்று எண்ணுகிறேன். அது ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவாகத் தான் அமையும் என்பதை தயவு செய்துநீங்கள்புரிந்துகொள்வீர்களாக.

இருப்பினும் 31.12.2016 ஆம் திகதி என்னுடைய ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்த போது கீழ்வரும் விடயங்கள் அவர்களால் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டன.



★எதிர்வரும் 04.01.2017 ஆம் திகதி அன்று ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். அத்தோடு முக்கிய அறிவித்தல் ஒன்றை அவர் வெளியிட உள்ளார் என ஊடகங்கள் மூலம் அறியக் கிடக்கிறது.

★06.01.2017 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற இருக்கிறது.

★10.01.2017 அன்று நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் இறுதி முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

மேற்படி நிகழ்வுகள் 2017 ஜனவரி மாதத்தில் இடம்பெற இருக்கின்றமையால் இவற்றின் சாதக, பாதக நிலைமைகளைக் கண்டறியாது தாங்கள் மாத்திரம் பதவியை இராஜினாமா செய்ய அனுமதிக்க முடியாது என எனக்கு உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

எனவே, மேற்கூறிய காரணங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இவற்றை அவதானித்து முடிவு எடுக்கலாம் எனும் நிலைப்பாட்டுக்கு வந்துள்ளேன்.

உண்மையில் சுயாட்சி முறையிலான வடக்கு கிழக்கு இணைந்த காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கொண்ட ஒரு தீர்வு எமக்கு அவசியம் பெறப்பட வேண்டிய ஒரு வரலாற்று சந்தர்ப்பமாக நாம் இதனைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும். தொடர்ந்தும் நாம் சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்படுவோமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் வடக்கு- கிழக்கு எங்கும் வீதிகளில் இறங்கி எமது ஜனநாயக ரீதியான தொடர் போராட்டங்களை நடத்தி ஓர் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான நிலைப்பாடாகும்.

ஜி.ரி.லிங்கநாதன்.
வட மாகாண சபை உறுப்பினர்
வுவனியா மாவட்டம்.

## பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியம்

பேக்கரி உற்பத்திப் பொருள்களின்விலைகள்உயர்த்தப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உற்பத்திப் பொருள்களுக்கு அதிகளவில் வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பேக்கரி உற்பத்தியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாஜரினின் விலை விற்பனை விலையையும் விட உயர்த்தப்பட்டுள்ளது என்றும் பாம் எண்ணெயின் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உற்பத்திப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ள காரணத்தினால் சில பேக்கரி உரிமையாளர்கள் ஏற்கனவே தங்களின் உற்பத்திகளுக்கான விலைகளை உயர்த்தியுள்ளனர் என என்.ஜயவர்தன தெரிவித்துள்ளார். இதேவேளை, பேக்கரி உற்பத்திவிலைகளைஅதிகரிக்க இடமளிக்கப்பட மாட்டாது என அண்மையில் அரசாங்கம் அறிவித்திருந்தது. (உ)

## இராதாகிருஷ்ணன் ஆலய கட்டிடத்தில் தீ விபத்து

கொழும்பு புதிய செட்டித்தெருவில் உள்ள ஸ்ரீ இராதாகிருஷ்ணன் ஆலயத்துக்கு சொந்தமான கட்டடத்தொகுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி ஆலயத்தில் புதிதாகக் கட்டப்படும் கட்டிடத்தின் மறைவுக்காகப் போர்த்தப்பட்டிருந்த திரைச் சேலை ஒன்றிலேயே தீ பரவியதாகக் கூறப்படுகின்றது.

புதுவருடக் கொண்டாட்டத்தையொட்டி கொளுத்தப்பட்ட வாண வேடிக்கைகள் மூலமே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஆலயத்திற்கு அருகில் இருந்த இரு வீடுகளிலும் இந்த தீ பரவியது. பெரும் சிரமத்தின் மத்தியில் தீ அணைக்கப்பட்டது. (ம)

## 600 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பில் 30 புதிய பாலங்கள்

### மட்டு.அரச அதிபர் சார்ள்ஸ் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.02

மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்துப் பிரச்சினையைக் குறைக்கும் வகையில் மாவட்டத்தின் 08 பிரதேச செயலாளர்பிரிவுகளில் புதிதாக 30 கிராமியப்பாலங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்தப் பாலங்களை அமைக்க சுமார் 600 மில்லியன் ரூபா நிதி மத்திய அரசின் மாகாண உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சால் ஒதுக்கப்படவுள்ளது.

-இவ்வாறு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரதீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு மற்றும் மண்முனை மேற்கு, மண்முனை வடக்கு, ஏறாவூர்பற்று, கோறளைப் பற்றுத் தெற்கு, கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று வடக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இப்பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.

இப்புதிய பாலங்களுக்கான வடிவமைப்பு வேலைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 02 பாலங்களுக்கான வடிவமைப்பு வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கான கட்டுமான வேலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.-என்றார் (ச)

## கிழக்கில் தொடரும் நில அபகரிப்புகள்; விழித்துக் கொள்ளுமா நல்லாட்சி அரசு?

### கேள்வி எழுப்புகிறார் வியாழேந்திரன் எம்.பி



கிழக்கிலே யுத்தம் முடிந்து சுமார் 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இருந்த போதிலும் பொது மக்களின் காணிகள் பொலிஸ், மற்றும் படையினரால் இன்னமும் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன. நல்லாட்சி அரசு, இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் பாராமுகமாகவே இருக்கிறது. பிறந்திருக்கிற இந்த ஆண்டிலாவது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை அரசு கவனத்திற்கொள்ளுமா?

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களின் குடியிருப்புக் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் இருப்பது தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நல்லாட்சியிலே மக்களின் வாழ்வாதாரத் தேவைகளைக் கூட நிறைவு செய்து கொடுக்க முடியாத நிலையில் உள்ளோம். கிழக்கில் பொது மக்களுக்குச் சொந்தமான பல காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளன. இதனால் மக்கள் தமது உரிமையைக் கேட்டு தெருவுக்கு வரும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலம்பாவெளியில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் உள்ள தர்மஸ்தாபனமான சுவாமி ராமதாஸ் நிறுவனத்தின் கருணாலய நிர்வாகத்துக்குச் சொந்தமான காணியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஆகியவற்றில் பேசப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பலரும் காணிகள் 3 மாதங்களில் விடுவிக்கப்படும் என வாக்குறுதியளித்தார்கள்.

ஆனால், இன்னும் அந்தக் காணி விடுவிக்கப்படவில்லை.


தற்போது பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டுள்ள இந்தக்காணியில், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற விதவைக் குடும்பங்கள் மற்றும் வசதி குறைந்த சிறுவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல திட்டங்களை முன்னெடுக்க ராமதாஸ் நிறுவனம் முயன்று வருகிறது.

இந்த முயற்சிக்கு இந்தக் காவலரண் தொடர்ந்தும் அங்கு இருப்பது தடையாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புகள், வாழ்வாதாரக் காணிகள் மற்றும் மக்கள் நலனோம்பும் திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ச)

### புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது

## ஏறாவூரில் சிறுவன் திடீர் சாவு



ஏறாவூர்,ஜன.02

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தளவாய்க் கிராமத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் திடீரென விழுந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளான்.

ஏறாவூர் தளவாய் கிராமத்தைச் சேர்ந்த தயாகரன் மதுஷான் (வயது-11) என்பவரேஉயிரிழந்தவர் ஆவார்.

பிரஸ்தாப சிறுவன் வீட்டு வளவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தேவாலயத்தில் நடந்த புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இதன் போது திடீரென நிலத்தில் விழுந்துள்ளார். இதன் போதே இந்த மரணம் சம்பவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## விபத்தில் ஒருவர் சாவு; அறுவர் படுகாயம்!




மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்து

மட்டக்களப்பு,ஜன.02

மின்னேரிய - ஹபரணை - படுஒய பிரதேசத்தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒருவர் உயிரிழந்துள்ளார். 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த கார் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை, காயமடைந்தவர்கள் பொலன்னறுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ்ஸின் பின்னால் கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த கார் வேக கட்டுப்பாட்டை இழந்து பஸ்ஸின் பின் பகுதியில் மோதியே இவ்விபத்து நிகழ்ந்துள் ளது. கார் பஸ்ஸின் பின் பகுதியினுள் புகுந்ததால் கார் பலத்த சேதமடைந்துள்ளது.

சம்பவம் குறித்து காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## ஹெரோயின் வியாபாரி உட்பட இருவர் கைது

அம்பாறை நகவம்புரப் பிரதேசத்தில் 790 மில்லிகிராம் ஹெரோயினுடன், அதன் வியாபாரி உட்பட இருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து குறித்த வீட்டின் முன் அம்பாறை தலைமையகப் பொலிஸ் நிலைய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது ஹெரோயினை வாங்கிக்கொண்டு வெளியே வந்த 20 வயதுடைய இளைஞனை நிறுத்திச் சோதனையிட்டனர். அதன் போது பிரஸ்தாப இளைஞனிடம் இருந்து 110 மில்லிகிராம் ஹெரோயினை பொலிஸார் மீட்டனர்.

இதனைத் தொடர்ந்து வீட்டை முற்றுகையிட்டு சோதனையிட்டபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த 680 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதுடன், கொழும்பு - கங்வெல பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய வியாபாரியும் கைது செய்யப்பட்டார்.

## உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்

திருகோணமலை,ஜன.02

நிலாவெளிப் பகுதியில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த தந்தையும் மகனும் இனந்தெரியாத நபர்களால் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நிலாவெளியைச் சேர்ந்த கே.மாரிமுத்து (வயது-45) மற்றும் அவரது மகனான எம். தனுஷன் (வயது -22) ஆகியோரே தாக்குதலுக்கு உள்ளானவர்கள் ஆவர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நிலாவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)




"கல்விக்கு கைகொடுப்போம்" திட்டத்துக்கு அமைவாக மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் உ.உதய ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவிப்பிரதேச செயலாளர் நவரூபரஞ்சனி முகுந்தன், திவிநெகும திணைக்கள தலைமை முகாமையாளர் செ.ஜெயராஜ், மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் யாகினி ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதையும், மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (ச)

# மத விக்கிரகம் வைக்கும் சம்பவங்களுடன் காந்தி சிலையை ஒப்பிடுவது துரதிஷ்டம்

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கண்டனம்

முல்லைத்தீவு, ஜன.02

பொது மக்களது நிலத்தில் மத விக்கிரகங்கள் வைக்கும் செயற்பாடுகளை, முறைப்படியான காந்தி சிலை வைப்பு நடவடிக்கையுடன் ஒப்பிட்டு கருத்துக்கள் வெளியாகி வருகின்றது துரதிஷ்டமான விடயம்.

தேசிய தலைவர் பிரபாகரன் கூட சில சந்தர்ப்பங்களில் காந்தியின் அஹிம்சைப் போராட்டங்களை ஊக்குவித்திருக்கிறார். அதன் வழியே திலீபன் உண்ணாவிரதப் போராட்டம் அமைந்தது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன். முல்லைத்தீவில் அமைக்கப்பட்டு வந்த காந்தி சிலை உடைக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயத்தை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மகாத்மா காந்தி ஓர் உலகம் போற்றும் அஹிம்சாவாதி. அணு ஆயுதங்களை விடவும் மனோதிடம் கொண்ட அஹிம்சைப் போராட்டங்கள் வெற்றி பெறும் என்பதை உலகத்துக்குக் காட்டிய மகான். தனிமனிதனாகப் போராடி தன்னுயிரையும் ஈய்த்தார்.

தென்னாபிரிக்காவில் தொடங்கிய அவரது அஹிம்சை போராட்டம் இந்தியாவில் விரிவடைந்தபோது அது ஆசிய விடுதலையாக வெற்றியுடன் உருப்பெற்றது. அவர் எடுத்துக் கொண்ட அஹிம்சை என்ற ஆயுதம் உலகெங்கும் அவரை அஹிம்சையின் தந்தையாக ஏற்றுக்கொள்ள வைத்தது. அதனால் தான் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் காந்தி அடிகளது உருவச்சிலைகள் வைத்து அவர் போற்றப்படுகின்றார்.



அவரது தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கெதிரான போராட்டம் இன்று அங்கு ஓர் இன விடுதலையைத் தந்துள்ளது. இந்தியாவில் அவர் நடத்திய ஆங்கிலேயரின் உப்புவரிக்கு எதிரான அஹிம்சை போராட்டம், வெள்ளையனே வெளியேறு அஹிம்சைப் போராட்டம், அவரது ஒத்துழையாமை இயக்கம் போன்றவை இறுதியில் இந்தியாவுக்கு மட்டுமல்ல இலங்கை உட்பட பல தெற்காசிய நாடுகளுக்கு விடுதலையைத் தேடித்தந்தது.

தேசிய தலைவர் வே.பிரபாகரன் கூட சில சந்தர்ப்பங்களில் காந்தியின் அஹிம்சை போராட்டங்களை ஊக்குவித்திருக்கிறார். அதன் வழியே திலீபன் உண்ணாவிரத போராட்டம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு நகரில் காந்தி சிலை அமைப்பு விடயம் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே பகிரங்கமாக மாவட்ட இணைப்புக் குழுவில் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்குத் தெரியப்படுத்தப்படாமல், மத்திய அரசின் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்ட மத விக்கிரகங்கள் பொது நிலத்தில் வைக்கப்பட்ட நடவடிக்கைகளை, முறைப்படியான காந்தி சிலை வைப்பு நடவடிக்கையுடன் ஒப்பிட்டு கருத்துக்கள் வெளியாகின்றமை துரதிஷ்டம் எனலாம்.

சிலை வைப்பு விடயம் அரச அதிகாரிகளால் அரச சட்டங்களுக்கு அமைவாக செயல்படுத்தப்பட வேண்டிய விடயம். அதில் 2016 மார்கழி 31 இற்கு முன் செயற்படுத்தப்பட வேண்டியது என்பதால் இறுதி நடைமுறைகள் சில செயற்படுத்தத் தாமதம் ஏற்பட்டிருந்தது. எனவே இறுதியாக 19.12.2016 நடைபெற்ற முல்லை. மாவட்ட இணைப்புக் குழுவில் விவாதிக்கப்பட்டு சிலை அமைப்புக்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

அப்படியிருக்க அடையாளம் காணப்படாத விஷமிகள் சிலர், மகாத்மா காந்தி சிலையை உடைத்தமை அநாகரிகமான செயல். இந்த விடயத்தில் ஈழத்தமிழர்கள் பால் பழி சுமத்தும் - ஈழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே நான் பார்க்கிறேன்.

எனவே, நடந்து முடிந்த இந்த பாதக செயலை எவர் செய்திருந்தாலும் பகிரங்கமாகக் கண்டித்து நிற்கிறேன். - என்றுள்ளது. (ஐ-100)

# நல்லாட்சி அரசு நீடிக்கும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.02

அரசுக்குள் இரண்டு நிலைப்பாடுகளைக் கொண்ட குழுக்கள் இருக்கின்றபோதும் நல்லாட்சி அரசு ஐந்தாண்டு காலத்துக்கு நீடிக்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

தம்மை சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

அரசில் உள்ள இரண்டு கட்சிகளும் தமக்கிடையில் உள்ள பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். உள்ளூராட்சி, மாகாணசபைகள் ராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜெயரத்னவின் பதவி விலகல் விடயத்தை பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



அரசில் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மஹிந்த தரப்புடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்க்கப் போகிறார்கள் என்ற செய்தி வெளியான நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஆப்கானுக்கான இலங்கைத் தூதர் முன்னாள் விமானப் படைத் தளபதி

கொழும்பு, ஜன.02

ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக, இலங்கை விமானப் படையின் முன்னாள் தளபதி எயர் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்கள நியமிக்கப்படவுள்ளார்.

அண்மையில் சிறிலங்கா விமானப்படைத் தளபதி பதவியில் ஓய்வு பெற்ற எயர் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்களவை ஆப்கானிஸ்தானுக்கான தூதுவராக நியமிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

அவரது பெயர் இந்தப் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ள நிலையில், உயர் நிலைப் பதவிகளுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக இவர் முன்னிலையாவார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இவரை இந்தப் பதவிக்குப் பொருத்தமானவர் என்று ஏற்றுக்கொள்ளும் நிலையில், ஆப்கானிஸ்தானுக்கான தூதுவராக எயர் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்கள நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கூட்டுக் கட்டளைத் தளபதி பதவியை இரத்துச் செய்வது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஜன.02

கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி பதவியை இரத்து செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பதவியை தற்போது எயர் சீப் மார்ஷல் கோலித குணதிலக்க வகித்து வருகின்றார்.

கோலித குணதிலக்கவை ஓய்வுபெற வைத்து அவரது அலுவலகத்தை மூட வேண்டுமென ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2009 ஆம் ஆண்டில் விசேட சட்டமூலமொன்றின் மூலம் இந்த அலுவலகம் நிறுவப்பட்டிருந்தது.

அந்தக் காலப் பகுதியில் இராணுவத் தளபதியாக கடமையாற்றிய சரத் பொன்சேகாவை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் நோக்கிலேயே இந்த கூட்டுப்படை பிரதானி பதவி உருவாக்கப்பட்டது.

இந்தப் பதவியை வழங்கி சரத் பொன்சேகாவின் அதிகாரங்கள் முடக்கப்பட்டமையே, மஹிந்த அரசுடன் சரத் பொன்சேகா முரண்படுவதற்கு பிரதான ஏதுவாக அமைந்தது.



எனினும் இந்த அலுவலகத்தை தொடர்ந்தும் கொண்டு நடத்துவதில் எவ்வித பயனும் கிடையாது என்று ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பதவியை ரத்து செய்யுமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐ.ஓ.சியிடமுள்ள எண்ணெய்க் குதங்களை மீளப் பெற இலங்கை அரசு முடிவு?

திருகோணமலை - சீனக்குடாவில், ஐ.ஓ.சி. எனப்படும் இந்திய எண்ணெய்நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று எண்ணெய்க் குதங்களை மீளப்பெறுவதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிலையில், இது குறித்து இந்திய அரசுடன் இலங்கை பேச்சு நடத்த வேண்டும் என்று இந்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, மேலதிக டீசல் மற்றும் எண்ணெயைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் நோக்கில், சீனக்குடாவில் உள்ள மூன்று எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய்நிறுவனத்திடம் இருந்து மீளப் பெறும் அமைச்சரவைத் தீர்மானம் அண்மையில் எடுக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கைப் பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி உறுதி செய்துள்ளார். ''தேசிய தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய எண்ணெய் நிறுவனத்துக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

''அமைச்சரவைத் தீர்மானத்தில் தலையிடும் உரிமை எந்தவொரு நிறுவனத்துக்கும் கிடையாது. எனினும், அயல் நாட்டுடன் பிரச்சினையை ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை.

''அடுத்த வாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், சீனக்குடா எண்ணெய்க் குதங்களைப் பார்வையிடுவதற்குச் செல்வார்கள்.'' என்றும் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். இதே வேளை, இரண்டு நாட்டு அரசுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்பாட்டின்படி, தேவைப்பட்டால் இலங்கை அந்த எண்ணெய்க் குதங்களை மீளப் பெற முடியும். இது குறித்து இந்திய அரசுடனேயே இலங்கை அரசு பேச வேண்டும் என்று இந்திய எண்ணெய் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சியாம் போரா தெரிவித்துள்ளார்.

# முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் ஆயிரம் விவசாயிகளுக்கு உலர் உணவுப் பொதிகள்

## வடக்கு மாகாண சபை வழங்கியது

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் விவசாயத்தில் ஈடுபடும் ஆயிரம் விவசாயிகளுக்கு வடமாகாண சபை ஒரு மில்லியன் ரூபா செலவிலான உலருணவுப் பொதிகளை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒட்டுசுட்டான் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

முத்துஐயன்கட்டு குளத்தில் தற்போது அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றமையால் அதன் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இவ்வருடம் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவில்லை.

தற்போது மழை இல்லாத காரணத்தால் பெரும்போக நெற்செய்கையும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால் மேற்படி பிரதேச விவசாயிகள் வாழ்வாதார ரீதியாகப் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்துள்ள நிலையிலேயே இந்த உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன் மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர் சிறீஸ் கந்தராஜா, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அநிருத்தனன் மற்றும் பல அதிகாரிகளும் பங்குபற்றினர். (ம-81)







# அபிவிருத்தி உதவிகள்

வவுனியா மாவட்டம் அம்மலங்கொடல்ல கிராமத்தைச் சேர்ந்த திருமதி பிரின்சி கொப்பேகடுவவின் கணவர் அரசியல் கைதியாக கடந்த பல ஆண்டுகள் சிறையில் இருந்து தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அந்தக் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக, அவர்களிடம் கோழி வளர்ப்புக்கான உதவிகளை அமைச்சர் பா.டெனிஸ்வரன் வழங்கியுள்ளார்.


2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து 10 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கி கோழிக் குஞ்சுகள் மற்றும் தீவனம் கொள்வனவுசெய்வதற்குஅவர்களுக்கு உதவியுள்ளார்.

இதேவேளை, மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அந்தோனியார்புரத்தில் உள்ள முன்பள்ளிக்கு மின்னிணைப்பு பெற்றுத்தருமாறும் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து 21 ஆயிரம் ரூபாவை ஒதுக்கி அதற்குரிய காசோலையை முன்பள்ளி பொறுப்பாசிரியரிடம் அமைச்சர் வழங்கியுள்ளார். (ஐ)

# சேவை பாராட்டு நிகழ்வு





வடமாகாணத்தில் வெவ்வேறு மாவட்டங்களில் 14 ஆண்டுகள் தனது அர்ப்பணிப்பான பணியைமேற்கொண்டு தற்போது சொந்த இடமான திருகோணமலை கிண்ணியா மின்சார சபைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் மன்னார் மின் அத்தியட்சகர் எம்.எம்.எம்.மிஸ்றக்கின் சேவையைப் பாராட்டு வைபவம் இடம்பெற்றது.

முசலி பிரதேச செயலகத்தின் ஒளி விழா நிகழ்வுகடந்தவெள்ளிக்கிழமை முசலி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் முசலி பிரதேசசெயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார்மின்அத்தியட்சகர் எம்.எம்.எம்.மிஸ்றக், சிறப்பு விருந்தினர்களாக முத்தரிப்புத்துறை செங்கோல் மாதா ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை இ.டெலிகலிஸ்ரஸ், சிலாபத்துறை புனித சவேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.ஏ.தவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது வட மாகாண மின்சார சபையில் ஒன்பது ஆண்டுகளும், மன்னார் மின்சார சபையில் எட்டு வருடங்களும் சேவையாற்றி, சொந்த இடமான திருகோணமலை கிண்ணியா மின்சார சபைக்கு இடமாற்றலாகிச் செல்லும் மின் அத்தியட்சகர் எம்.எம்.எம்.மிஸ்றக் கௌரவிக்கப்பட்டார். (ஐ)

# காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த மின்சார வேலிகள் அமையுங்கள்!

## முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.02

முல்லைத்தீவு, துணுக்காயின் ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மின்சார வேலிகள் அமைத்துத் தருமாறு இந்தக் கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐயன்கன்குளத்தில் 210 குடும்பங்களும், பழையமுறிகண்டியில் 40 குடும்பங்களும், புத்துவெட்டுவானில் 80 குடும்பங்களும் யானைகளின் தொல்லைகளை எதிர்கொண்டுள்ளன. விவசாயச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக புத்துவெட்டுவானில்இருந்து ஐயன்கன்குளம் பாடசாலைக்குச்செல்லும்மாணவர்களும் மருத்துவமனைக்குச் செல்லும் மக்களும் அடிக்கடி யானைகளால் தாக்கப்படுவதும்துரத்தப்படுவதுமாக நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் வழங்கப்பட்ட யானை வெடிகளுக்குக் கூட அஞ்சாத யானைகளை எதிர்கொள்வதற்குமின்சாரவேலியை அமைத்துத் தருமாறு இந்தக் கிராமங்களின் மக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர். (ஐ-70)

# மண் அகழ்வால் தாழ்பாலம் உடைப்பெடுக்கும் அபாயம்

## தடுக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஜன.02

கிளிநொச்சி, அக்கராயனில் மீண்டும் தொடங்கியுள்ள சட்டவிரோத மணல் அகழ்வால் அக்கராயன் தாழ்பாலம் உடைப்பெடுக்கக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்று கிராம மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அக்கராயன்குளத்தில் இருந்து குடமுருட்டி வரையான ஏழு கிலோ மீற்றர் வரையான ஆற்றுப் பகுதியில் கடந்த ஒரு வார காலமாக மணல் அகழ்வு அதிகரித்துள்ளது.

இந்த ஆற்றுப் பகுதியில் ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், அக்கராயன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களால் மணல் அகழ்வு நடைபெறுகின்றது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களின் முக்கிய பொறுப்பில் உள்ளவர்களே நேரடியாக மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என்று மக்கள் கிராம அலுவலர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மக்களின் முறைப்பாடுகள் கரைச்சி பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்டச்செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


கடந்த ஏப்ரல் மாதத்தில் பெய்த பெரு மழையின் போது அக்கராயன் தாழ்பாலம் கடும் சேதங்களை எதிர்கொண்டது.

பின்னர்தற்காலிகமண்பரவப்பட்டு போக்குவரத்துகள் நடைபெற்று வரும் நிலையில் மழையால் இந்தப் பாலப் பகுதியில் பெருமளவு மணல் குவிந்தது. இந்த நிலையில் இந்தப் பாலப் பகுதியில் மணல் அகழக்கூடாது. மண் அகழ்ந்தால் பாலத்துக்கு ஆபத்து ஏற்பட்டு போக்குவரத்துகள் தடைப்படும் என்று மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டது.

எனினும், கடந்த ஒருவார காலமாக இந்தப் பாலப் பகுதியிலும் ஆற்றுப் பகுதியிலும் தொடரும் மணல் அகழ்வால் இனிவரும் மழை காலத்தில் அக்கராயன் தாழ்பாலம் உடைப்பெடுக்கக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வழங்கிய தகவல்களை அக்கராயன் கிராம அலுவலர் பசுபதி சபாரட்ணம், கரைச்சி பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். (ஐ-70)

# புதிய வருட ஆராதனை



மன்னார், ஜன.02

2017 ஆங்கில புது வருட பிறப்பின்போது மன்னார் மாவட்டத்தில் பெருப்பாலான கிறிஸ்தவ ஆலயங்களில் நள்ளிரவு மற்றும் காலைத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டு புதிய வருடத்தை இறை ஆசீருடன் தொடங்கினர்.

மன்னார் மறை மாவட்டத்தில் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் நள்ளிரவு திருப்பலியை பங்கு தந்தையர்கள் அலெக்ஸ் சாண்டர், பெயிலன் ஆகியோர் ஒப்புக் கொடுத்தனர். (ஐ-112)



# தீந்தமிழ் திருவெம்பாவை

தெய்வத் தமிழ்ச் சுடர் இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானைக் குறித்துப் பாடப் பெற்ற திருவெம்பாவைப் பூஜை இன்று ஆரம்பமாகின்றது. தித்திக்கும் தீந்தமிழ் திருவெம்பாவை மணிவாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தின் ஓர் இனிய பகுதியாகும்.

''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்''என்கின்ற முதுமொழி திருவாசகத்தின் பெருமையை பறைசாற்றி நிற்கின்றது. சமயகுரவர் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தின் மேன்மையை உணர்ந்த நமது முன்னோர் மார்கழி மாதம் முழுக்க அதற்கென ஒதுக்கி வைத்துப் பாடி வருகின்றனர். மற்ற எல்லாத் திருமுறைகளையும் திருக் காப்பிட்டு வைத்துவிட்டு திருவாசகத்தை மட்டும் ஓதி வந்தமை குறிப்பிடத்தக்கது.

திருவாசகம் சிவபெருமானுடைய அருமை பெருமைகளை அழகாக எடுத்தியம்பி நிற்கும் திவ்ய திருப்பதிகமாகும். இறைவனுடைய திருவருள் பெற்ற மணிவாசகர் பெருமை சொல்லில் அடங்காது. பரமேஸ்வரனாகிய சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கியும் வைகையைப் பெருக்கெடுக்கச் செய்தும் பிட்டுக்கு மண் சுமந்தும் பிரம்பால் அடி வேண்டியும் பல்வேறு அற்புதங்களை இவருக்காகவே செய்துள்ளார் என்று புராணம் கூறுகின்றது.

'தென்னவன் பிரமராயன்' என்ற நாமத்தில் ஒரு சிறப்பு இருக்கின்றது. மாணிக்கவாசகர் குதிரை வாங்க வந்து தான் கொண்டுவந்த பொன்னைத் திருப்பணி வேலைகளுக்குச் செலவு செய்துவிட்டு, வருந்தி நின்ற போது திருப்பெருந்துறைப் பெருமான் ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என்று சொல்லித் திருவிளையாடல் புரிந்ததும் அடியவருக்காக ஆண்டவன் கீழிறங்கி வந்து அருள்புரிவான் என்பதும் காணக் கிடக்கின்றது.

மாணிக்கவாசகரின் இந்த தீந்தமிழ்ப் பனுவலான திருவாசகம் நம்முடைய சைவ ஆலயங்களில் மார்கழி மாத திருவாசக முற்றோதலாக நடைபெறுவது வழக்கம். திருவெம்பாவை அதிகாலை வேளையில் ஓதப்படுவது ஏனெனில் வைகறைப் பொழுது அமைதியும் உற்சாகமும் தெய்வீகமும் அடங்கிய ஒரு நல்ல நேரமாகும்.

எனவே, சைவர்களாகிய நாம் திருவாசகத்தை ஓதி உணர்ந்து சிவபெருமானின் திவ்ய திருவருளுக்கும் பாத்திரமாகி திருவெம்பாவைப் பூஜையிலும் பங்குபற்றி அவனருளாலே அவன்தான் வணங்கி இன்புற்று மகிழ்வோமாக!

> திருவாசகம் சிவபெருமானுடைய அருமை பெருமைகளை அழகாக எடுத்தியம்பி நிற்கும் திவ்ய திருப்பதிகமாகும். இறைவனுடைய திருவருள் பெற்ற மணிவாசகர் பெருமை சொல்லில் அடங்காது.

துர்முகி வருஷ 2016 ஆம் ஆண்டுக்குரிய உதயத்தின் முன் திருவெம்பாவை பூஜை ஆரம்பம் மார்கழி 18ஆம் திகதி (02.01.2017) இன்று திங்கட்கிழமை மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெற்று திருவாதிரை உதயம் ஆர்த்திரா தரிசனத்துடன் புதன்கிழமை (11.01.2017) நிறைவு பெறுகின்றது.

சிவன் மூவருக்கும் மேலான கடவுள். சைவ சித்தாந்த விதி முறைகளின்படி இறைவன் பிறப்பற்றவன். இதையே ''ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதி'' அதாவது தொடக்கமும் முடிவும் இல்லாத சோதி வடிவம் என மாணிக்கவாசகர் திருவெம்பாவையின் முதற்பாடலிலேயே மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்.

சிவபெருமான் ஒருவனே முதல்வனாக, அழியாப் பொருளாக நிலைபெற்று பின் படைத்தல் தொழிலைச் செய்வதற்கு பிரணவ தத்துவத்தைச் சார்ந்து நிற்பவன் என்பது சைவசமயத்தைக் கடைப்பிடிக்கும் இந்து மதமக்களின் அயராத நம்பிக்கை. இதையே ''ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை ஏழை பங்காளனைப் பாடேல் ஒரெம்பாவாய்'' என மாணிக்கவாசகர் திருவெம்பாவைப் பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

திருவெம்பாவையில் இறைவனின் பெருமை கூறி ஆணவ மலம் நீங்கப் பெற்ற மனித உயிர்கள் இறைவனை அடைவதையே கருத்தாகக் கொண்டு அதனடிப்படையிலேயே திருவெம்பாவையில் வரும் இருபது பாடல்களையும் மிகவும் கருத்தாளத்துடன் மாணிக்கவாசகர் இயற்றியுள்ளார்.

இறுதியாக உள்ள பாடலில் 'போற்றியருள் நின் ஆதியாம் பாதமலர் போற்றி' என ஆரம்பித்து "போற்றியாம் மார்கழி நீராடேல் ஓரெம்பாவாய்' என முடிவுறுகின்றது. பெருமானே எம்மைக் காப்பாற்றி ஆதியாயும் அந்தமாயும் உள்ள பாதங்கள் காக்க, தோற்றம், காப்பு, அழிவு மூன்றுக்கும் காரணமான பாதங்கள் காக்க, மால், பிரமன் காணாத பாதங்கள் காக்க, நாங்கள் உய்த்துப் பிழைக்க ஆட்கொண்டருளும் பாதங்கள் காக்க என்றும் நாம் நீராடி



திருமதி.மலர்விழி .கனகசபை



கட்டுவன் கரண்டக்குளம் ஐயப்பன் கோவில் தீர்த்தத் திருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தீர்த்தம் நிறைவடைந்த பின்னர் கொடியிறக்கம் இடம்பெற்ற போது...



# மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டும் மார்கழித் திருவெம்பாவை

மார்கழி நீருக்கு வணங்குவோம் என்றும் வீதியிலே சேர்ந்து செல்லும் பல மங்கையர்கள் தம் தோழியரைத் துயில் எழுப்பி மார்கழி நீராட அழைத்துச் செல்லும் காட்சிகள் பலபடியாகத் சித்திரித்துக் காட்டப்படுகின்றன. பாவை நோன்பு ''மார்கழி நோன்பு'' கார்த்தியாயினி விரதம் என்பதுமாம்.


''திருவாசகத்துக்கு உருகாதோர் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்பது ஆன்றோர் வாக்கு. இதனால் ''திருவாசகம் என்னும் தேன்'' நமக்குக் கிடைத்தது. தனது அனுபவங்களை பாடல்களாக்கி மக்களை இறை வழிபாட்டில் ஈடுபடச் செய்தார். அந்தப் பாடல்களே மணி வாசகங்கள் ஆகின. திருவாதவூரடிகள் மாணிக்கவாசகர் ஆனார். திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருவாசகம் போன்ற பாடல்களைப் பாடிய திருவாதவூரடிகள் புராணத்தைப் படித்துப்பயன் சொல்லும் நிகழ்வுகளை அன்றும், இன்றும் எமது சைவ ஆலயங்களில் நிகழ்த்தி வருவதை நாம் கண்கூடாகக் காணலாம்.

இவ்வாறு அதிகாலையில் எழுந்து பத்து தினங்களும் மார்கழி குளிர் நீரில் நீராடி, ஆலயங்களுக்குச் சென்று மிகவும் பக்தி சிரத்தையுடன் திருவெம்பாவைப் பாடல்களைப்பாடி அரும்பெரும் சோதியாகிய சிவனை வணங்கி அவன் அருள் பெற சைவ சமயத்தவராகிய நாம் முன் வந்து என்றும் அழியாத சைவசமயத்தை நிலை பெறச் செய்து மானிடராகப் பிறந்த அனைவரும் மண்ணிலே நல்ல வண்ணம் வாழ இறைவன் அருள் பாலிப்பாராக!




பொன்.வேணு கிருஷ்ணா

**'தயக்கம் காட்டல்' மற்றும் 'கால்-பின்வாங்கல்'**



Russian and Turkish Foreign Ministers Sergey Lavrov and Mevlut Cavusogl

டிசெம்பர் 6 அன்று, யில்டிரிம் சிரியாவில் 'தயக்கம் காட்டல்' மற்றும் 'கால்-பின்வாங்கல்' ஆகியவற்றுக்காக நேட்டோவைவிமர்சித்தார்: பயங்கரவாதத்துக்கு எதிராக நாகரிகத்தை பாதுகாப்பது பற்றி நல்ல வார்த்தைகள் பரிமாறப்படுகின்றன. ஆனால் பெரிய பயங்கரவாத வலைப்பின்னல்கள் எல்லைகள் தாண்டி இன்று நம்மை சவால் செய்து கொண்டிருக்கின்றன. துருக்கி-ரஷ்ய முன்முயற்சியானது பயங்கரவாதத்தை அழிப்பதற்கான ஒரு வலிமை கொண்ட மற்றும் ஐக்கிய சர்வதேச அணிக்கான ஒரு உந்தல் என்று விவரித்தார்.( On December 6, Yildirim criticized NATO for hesitation and foot&dragging in Syria: Nice words are exchanged about defending civilization against terrorism. But the big terrorist networks challenging us today operate across borders. He described the Turkish&Russian initiative as a push for a forceful and united international front to eradicate terrorism.)

**"ட்ரம்ப் அனுபவ அடிப்படையில் செயல்படும் ஒரு மனிதர். பெரும்பாலான எமது கருத்துக்கள் பகுதி அளவில் ஒத்திருக்கும்; ட்ரம்ப் நிர்வாகத்துடன் நாம் ஒத்துழைக்க முடியும்" என்று எர்டோகன் கூறினார்.**



எர்டோகன் அரசாங்கம் கூட, ட்ரம்ப் நிர்வாகமானது ரஷ்யாமீது "மென்மையான" நிலைப்பாட்டை எடுக்கும் மற்றும் துருக்கிக்கு மிக அரசியல் சுதந்திர செயற்பாட்டைவழங்கும் எனநம்புவதாகத் தெரிகின்றது.( Erdogan's government also seems to hope the Trump administration will take a soft line on Russia and offer Turkey more political leeway.) டிசெம்பர் 15 அன்று அரசாங்க சார்பு நாளிதழான ஈ்ச்டிடுேதா குச்ஞ்சட இடம் துருக்கி வெளியுறவு அமைச்சர் காவுசோகுலு, ''ட்ரம்ப் அனுபவ அடிப்படையில் செயல்படும் ஒரு மனிதர். பெரும்பாலான எமது கருத்துக்கள் பகுதி அளவில் ஒத்திருக்கும்'' என்று கூறிக்கொண்டு, ட்ரம்ப் நிர்வாகத்துடன் நாம் ஒத்துழைக்க முடியும் என்று கூறினார். (Speaking to the pro&government Daily Sabah paper on December 5, Turkish Foreign Minister Üavuolu said, The Trump administration is one we could cooperate with, claiming that Trump is a pragmatic person. Many of our views overlap.)




**எழுந்து வருவது அமெரிக்க ஏகாதிபத்திய கொள்கையின் ஒரு ஸ்திரமடைதல் அல்ல, மாறாக இன்னும் பெரிய வெடிப்புமிக்க நெருக்கடியின் வெளிப்பாடாகும்.**




"... AND THE UNITED STATES CONGRESS DOES NOT LOOK THE OTHER WAY."

ட்ரம்ப் தேர்வு நிலைமைகளை சீரடையச்செய்யும் மற்றும் துருக்கி மற்றும் மத்திய கிழக்குடனான அமெரிக்க உறவுகளில் உள்ள வெடிக்கும் பதட்டங்களை தணிக்கும் என்ற அத்தகைய நம்பிக்கைகள் உதிர்மண்ணால் கட்டப்படுகின்றன. ட்ரம்ப் அமெரிக்கா முதலில் என்ற தீவிரக் கொள்கையை அறிவித்துள்ளார் மற்றும் அது சீனாவுக்கு எதிரான தாக்குதலையும், அதேபோல ஈரானுடனான அணுவாயுத உடன்படிக்கை ரத்தையும் சமிக்ஞை காட்டுகிறது. எழுந்து வருவது அமெரிக்க ஏகாதிபத்திய கொள்கையின் ஒரு ஸ்திரமடைதல் அல்ல, மாறாக இன்னும் பெரிய வெடிப்புமிக்க நெருக்கடியின் வெளிப்பாடாகும். (Such hopes that Trump's election will stabilize the situation and dampen explosive tensions in US relations with Turkey and the Middle East are built on quicksand. Trump has announced an aggressive America first policy and is signalling an offensive against China, as well as the cancellation of the nuclear treaty with Iran. What is emerging is not a stabilization of US imperialist policy, but the eruption of even more explosive crises.)

(CNN)President&elect Donald Trump's top defense priorities came to light on Tuesday when Foreign Policy published a memo from Acting Under Secretary of Defense for Policy Brian McKeon and informed by his conversations with the Trump transition team. According to McKeon, Trump's four priorities will be: "develop a strategy to defeat/destroy ISIS", "build a strong defense", "develop a comprehensive USG cyber strategy"




and "find greater efficiencies."

While all these are important priorities, none of them should be his top ones. ISIS is indeed an adversary of the United States, but while it is an evil organization that has terrorized thousands, it is ultimately no more than a nuisance for the United States. As a point of comparison, ISIS and ISIS&inspired attacks have killed fewer Americans than gun violence by a factor of more than 1,000 to 1.

The only entity on Earth that has the capability to destroy the United States is Russia, and it is notable, if unsurprising, that Russia is not on Trump's list. Russia has over 1,700 deployed nuclear warheads and can strike the East Coast of the United States within 20 minutes. Nobody else, other than the United States, even comes close to Russia's destructive capacity.

It is perhaps more surprising that China, Iran and North Korea don't make the cut either. Except that by leaving off these state adversaries, Trump is setting the stage to follow through on his most disruptive, dangerous and destructive campaign promise: to withdraw the United States from the world.

Downplaying the threat from major state adversaries is step one in this withdrawal. It is also perfectly in line with Trump's general disdain for the US&led alliance system & NATO and our mutual defense treaties with our East Asian, Oceanic and Hemispheric allies & and the post&WWII international order rooted in free trade, international organizations and respect for territorial sovereignty. In short, this memo highlights Trump's willingness to follow through on his campaign statements that question the utility of alliances for the United States, view US military power as the core of a classic Mafia "collection racket" and promise to put "America first."

**ரஷ்ய-அமெரிக்க நட்பு வளருமா?**


பனிப்போர் காலத்தில் உலகின் கொம்யூனிச நாடுகளுக்கு தலைமை வகித்த வல்லரசான முன்னாள் சோவியத் யூனியன் அமெரிக்காவின் பிரதான எதிரியாக இருந்தது. 1991 December இல் முன்னாள் சோவியத் யூனியனின் உடைவின் பின்னர் அதிலிருந்து பல பிராந்தியங்களும் பிரிந்து போயின.

Belorussia, Estonia, Georgia, Kazakhstan, Kirghizia, Latvia, Lithuania, Moldavia, Tadzhikistan, Turkmenistan, Ukraine, and Uzbekistan ஆகிய பிராந்தியங்கள் பிரிந்து சுதந்திர பிரகடனம் செய்து வெளியேறிப் பிரிந்து போக, முன்னாள் சோவியத் யூனியனின் அணுவாயுத சக்தி வளங்கள் உட்பட ஏனைய பிரதான இராணுவ வளங்களையும் தன் வசம் எடுத்துக்கொண்டு பனிப் போருக்கு பிந்திய காலத்திலும் மீண்டும் அமெரிக்க எதிர்ப்பு வல்லரசாகவே ரஷ்யா எஞ்சி நிலைத்தது.

உலகின் அரசியல்- பொருளாதார-இராணுவ-இராஜதந்திர முக்கியத்துவம் மிக்க விடயங்களில் தொடர்ந்தும் ரஸ்யா அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்தது. ஐ.நாவின் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் பல சந்தர்ப்பங்களில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு எதிராகவே ரஷ்யா செயற்பட்டது. சிரியாவுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா தலைமையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் ரஷ்யாவின் வீட்டோ அதிகாரத்தால் வெட்டிச்சரிக்கப்பட்டன.

பாரிய ஆதரவை ஈர்க்கக்கூடிய ஒரு சாதகமான அரசியல் செய்தியை வழங்க வழியில்லாமல், ஹிலாரி கிளிண்டன், ட்ரம்புக்கு எதிரான தனது பிரசாரத்தை மிகவும் கீழ்த்தரமான மற்றும் பிற்போக்குத்தனமான மட்டத்தில் நடத்தினார் என்பதும் உண்மையே. முதலில், ஜனநாயகக் கட்சியினரும் அவர்களின் ஊடகக்கூலிகளும் ட்ரம்பை ரஷ்ய ஜனாதிபதியின் ஒரு முகவராகக் கூறிக் கண்டனம் செய்தனர். ஜனநாயகக் கட்சியின் மின்னஞ்சல்களை ஊடுருவல் செய்வதன் மூலமாக அமெரிக்கத் தேர்தலில் விளாடிமிர் புடின் செல்வாக்குச் செலுத்தப் பார்ப்பதாக அவர்கள் திட்டவட்டமாய் தெரிவித்தனர். எந்த ஆதார நிரூபணமும் இல்லாமலேயே இது முடிவில்லாமல் திரும்பத் திரும்ப அப்போதே கூறப்பட்டது. விக்கிலீக்ஸ் வெளியிட்ட மின்னஞ்சல்களில் என்ன இருந்தது என்பதில் இருந்து கவனத்தைத் திசைதிருப்புவதற்காக சோவியத் ஒன்றியத்தின் இடத்தில் ரஷ்யாவின் பெயரைப் போட்டு மெக்கார்த்திய சிவப்பு-தூண்டில் மறுவடிவமைப்பு செய்யப்பட்டது.

(கேள்வி தொடரும்...)




Donald Trump speaks during the opening of Trump Towers in Istanbul in 2012. Emrah Gurel / AP

காலைக்கதிர்
Kalaikkathir







ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




14

# தமிழ்த் தேசிய எழுச்சி

## தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டக் களம்




தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதம் தீவிரம் அடைந்து செல்ல விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களும் முனைப்படைந்து தமிழ்ப் பிரதேசத்து அரச நிர்வாகக் கட்டமைப்பை நிலைகுலையச் செய்தன. அரச காவல்துறையின் நிர்வாகத்தைச் சீர்குலைப்பதே அக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகளின் போர்த் தந்திரோபாயமாக அமைந்திருந்தது. காவல்துறை நிலையங்கள் மீதும் சுற்றுக் காவல் அணிகள் மீதும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு விடுதலைப் புலிகள் நிகழ்த்திய வெற்றிகரமான தாக்குதல்களின் விளைவாக அரச பயங்கரவாதத்தின் சக்தி வாய்ந்த கருவியாகச் செயற்பட்ட சட்ட, ஒழுங்கு அமைப்பானது படிப்படியாகச் சீர்குலைந்து சிதைவுற்றது.

1982 ஜூலை 2 அன்று யாழ்ப்பாண நகரிலிருந்து 16 மைல் தொலைவிலுள்ள நெல்லியடி பட்டினத்தில் காவல் துறையினரின் சுற்றுக் காவல் அணி ஒன்றின்மீது விடுலைப் புலிப் போராளிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினார்கள். இந்த மின்னல் வேகத் தாக்குதலில் நான்கு காவல்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்; மூன்று பேர் கடும் காயமடைந்தார்கள். காவல்துறையினரின் ஆயுதங்கள் அனைத்தையும் கைப்பற்றிய புலி வீரர்கள் காயம் எதுவுமின்றித் தப்பிச் சென்றனர். வெற்றிகரமாக நிகழ்ந்த இந்த அதிரடித் தாக்குதலுக்கு தலைமை வகித்த போராளி லெப்ரினன்ட் சத்தியநாதன் (சங்கர்) ஆவார்.

1982 ஒக்ரோபர் 27 அன்று சாவகச்சேரி காவல்நிலையம் விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதலுக்கு இலக்காகியது. அரண் காப்புகளால் வலுப்படுத்தப்பட்டிருந்த இந்த முக்கிய காவல் நிலையம் வெற்றிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்டு அங்கிருந்த பெரும் தொகையான ஆயுதங்கள் புலி வீரர்களால் கைப்பற்றப்பட்டமை ஜெயவர்த்தனா ஆட்சிப் பீடத்துக்கு கிலியைக் கொடுத்தது.

அன்றைய தினம் அதிகாலை விடுதலைப்புலிகளின் கெரில்லா அணி, கடத்தப்பட்ட பேருந்து வண்டி ஒன்றில் காவல் நிலையத்துக்கு அருகில் வந்தடைந்தது. அதிலிருந்து இறங்கிய புலிப் போராளிகள் சிலர், பொதுமக்களின் பாதுகாப்புக்காகக் கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் போக்குவரத்தைத் தடைசெய்து, நிலையெடுத்தனர்.

இதனையடுத்து, நன்கு ஆயுதம் தரித்த தாக்குதல் அணியொன்று மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் காவல் நிலைய வளாகத்துக்குள் நுழைந்து, தாக்கும் நிலை எடுத்தது. காப்பரணில் கடமையில் இருந்த காவல்துறையினர் தமது நகர்வைக் கண்ணுற்றனர் எனத் தெரிந்து கொண்ட மறுகணமே, புலிப் படையினரின் இயந்திரத் துப்பாக்கிகள் அனல் கக்கத் தொடங்கின. காப்பரணில் பதுங்கியிருந்த ஒருவர் அதிலேயே இறந்து விழ, ஏனையோர் காயங்களுடன் தப்பியோடினர். இதனையடுத்து, புலிகளின் அதிரடிப் படை வீரர்கள் சரமாரியாகச் சுட்டபடியே பிரதான கட்டடத்துக்குள் புயல் என நுழைந்தனர். முதலில் ஆயுத தளபாடங்கள் வைக்கப்பட்டிருந்த அறை தாக்குதலுக்கு இலக்காகியது. அங்கே, பணியில் இருந்த இரு காவல்துறை அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆயுதக் களஞ்சியம் உடைத்து திறக்கப்பட்டது. அங்கிருந்து 28 துப்பாக்கிகள், 2 உப இயந்திர துப்பாக்கிகள், ஒரு ரிவோல்வர், ஏராளமான ரவைகள் என்பன புலி வீரர்களிடம் சிக்கின. ஒரு கெரில்லா அணி கீழ்மாடியில் இருந்த ஆயுத அறையை சூறை ஆடிய வேளை, இன்னோர் அணி துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்தவாறு மேல் மாடிக்குள் பாய்ந்து சென்றது. இங்கு நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் இரு காவல்துறை அதிகாரிகள் கொல்லப்பட ஒருவர் மாடியில் இருந்து குதித்துத் தப்பி ஓடினார்.

சாவகச்சேரி காவல் நிலையம் மீதான தாக்குதலை தலைமை வகித்து நடத்தியவர் லெப்டினன் சார்ள்ஸ் அன்ரனி (ஆசிர், சீலன்) இவர் ஆயுதப் போராட்டத்தின்ஆரம்ப காலத்தில் ஒரு தலைசிறந்த தாக்குதல் தளபதியாக விளங்கியவர். துணிச்சலும் நிகரற்ற திறமையும் உடைய இவர், பிரபாகரனது நெருங்கிய நண்பர். இந்தத் தாக்குதலின் போது சீலன், புலேந்திரன், ரகு ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் மூவரும் தமிழகம் அனுப்பப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்றுத் தேறினார்கள்.

சாவகச்சேரி காவல் நிலையத்தைத் தாக்கி அழிப்பதில் சங்கர்(சத்தியநாதன்) முக்கிய பங்கு வகித்தார். சண்டையில் தனது துணிச்சலையும் திறனாற்றலையும் காண்பித்தமை மட்டுமன்றி, காயமடைந்த போராளிகளையும் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களையும் பாதுகாப்பாகக் குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டு சேர்த்தவர் சங்கர். காயமடைந்த புலி வீரர்கள் மூவரையும் சிங்கள ஆயுதப்படையினரின் கெடுபிடிகள், சோதனைகளுக்கும் மத்தியில், தமிழகத்துக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தவனும் அவனே.

ஆயுதம் ஏந்திய எதிர்ப்பு இயக்கத்தின் ஆரம்ப கால வளர்ச்சிக் கட்டத்தில் தலைசிறந்த தாக்குதல் தளபதியாக விளங்கிய சங்கர், சிங்கள ஆயுதப் படையினரின் தீவிர வேட்டைக்கு இலக்காகி இருந்தான். விடுதலைப் புலிகளின் தங்குமிடம் பற்றிக் கிடைத்த தகவலை அடுத்து, 1982 நவம்பர் 20 அன்று, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றை இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர். அவ்வேளை அங்கிருந்த சங்கர், முற்றுகையிட்ட இராணுவத்தினரை தனது கைத் துப்பாக்கியால் சுட்டவாறு தப்பி ஓட முயற்சிக்கின்றான். வீட்டு மதிலைத் தாண்டிக் குதிக்க முயற்சித்தபொழுது, இராணுவத்தினர் அவன் மீது சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். வயிற்றில் குண்டு பாய்ந்து காயமடைந்தபோதும், சுற்றி வளைப்பை உடைத்துக் கொண்டு அவன் தப்பி ஓடினான். காயமடைந்த சங்கரை சிகிச்சைக்காகத் தமிழகம் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும் இராணுவ சோதனைகள் தீவிரமாகி இருந்தமையால் தாமதம் ஏற்பட்டது. இறுதியாக, ஐந்து நாள்களின் பின்பு, கடல்மார்க்கமாக அவன் வேதாரணியம் கொண்டு செல்லப்பட்டு, பின்பு அங்கிருந்து மதுரை சென்றடைய சங்கரின் உடல் நிலை மோசமடைகிறது. தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் ஆபத்தான கட்டத்தை அடைந்தான். அப்பொழுது தலைவரை சந்திக்க வேண்டும் என்ற தனது இறுதி ஆசையை வெளியிட்டான். அதிஷ்டவசமாக, அவ்வேளை பிரபாகரன் மதுரையில் இருந்தார். பாண்டி பஜார் துப்பாக்கி மோதல் சம்பவத்தை அடுத்து நிபந்தனைப் பிணையில் தங்கியிருந்த பிரபாகரன், சங்கர் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு விரைந்தார். உயிர் பிரிகின்ற இறுதி நேரம் தலைவனின் மடியில் தலைசாய்ந்தவாறு சாவைத் தழுவிக் கொள்கிறான் சங்கர். 1982 நவம்பர் 27 அன்று, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதலாவது மாவீரன் என்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்று அவன் மரணித்தான்.







(தொடரும்...)

# சகல மாவட்டங்களிலும் நுகர்வோர் சங்கங்கள்

## இந்த வருடத்தில் அமைக்க ஏற்பாடு

கொழும்பு, ஜன.02

இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த வருடம் முதல் நுகர்வோர் சங்கங்களை அமைப்பதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக அதிகார சபையின் தலைவர் ஹசித்த திலகரத்ன தெரிவித்தவை வருமாறு:-

''உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நியாயமான விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதேவேளை, தரமான நுகர்வுப் பொருள்களைப் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்ய வர்த்தகர்களை ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும்.

''நாடு முழுவதும் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களை நிறுவுவதற்கும் அடுத்த வருடம் நடவடிக்கை எடுக்கப்படும்.

''நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவூட்டுவது இதன் நோக்கமாகும். இதற்காக கல்வியமைச்சின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்படும்.

''இதுதவிர சமயத் தலைவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

''இந்த வேலைத்திட்டம் தொடர்பாக சுவரொட்டிகள் மற்றும் பனர்கள் மூலம் மக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் விளக்கமளிக்கும் வேலைத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.''என்றார். (எ)

# 2016 இல் மீட்கப்பட்ட போதைப் பொருள்களின் பெறுமதி ரூ.2,470 கோடி

கொழும்பு, ஜன.02

கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் இரண்டாயிரம் கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் மற்றும் கொக்கேய்ன் போதைப் பொருளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் மட்டும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களின் மொத்தப் பெறுமதி 2 ஆயிரத்து 470 கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் ஆயிரத்து 486 கிலோ கிராம் கொக்கேய்ன் போதைப் பொருளும், 147 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருளும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

# டிஜிட்டல் மயமாகின்றது பரீட்சைத் திணைக்களம்

கொழும்பு, ஜன.02

இலங்கை பரீட்சைத் திணைக்களம் இந்த ஆண்டு டிஜிட்டல் மயப்படுத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டின் மிகச் சிறந்த அரச நிறுவனமாக பரீட்சைத் திணைக்களத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழு பெயரிட்டிருந்தது.

பரீட்சைத் திணைக்களத்தின் செயற்றிறனை மேலும் உயர்த்தும் நோக்கில் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

கடந்தகாலப் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட உள்ளன என்று பரீட்சை ஆணையாளர் எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் பணிப்புரைக்கு அமைய டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் இதற்காக கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட உள்ளன என்று கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

உயர்தர மாணவர்களுக்கு இந்த ஆண்டு மடிக்கணினிகள் வழங்கப்படஉள்ளன. இவற்றின் ஊடாக மாணவர்கள் மாதிரி வினாத்தாள்களுக்குப் பதிலளித்து அவற்றைச் சரி, பிழை பார்த்துக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைத் திணைக்களத்தின் தகவல்களை நீண்ட காலத்துக்கு பாதுகாத்துக்கொள்ள டிஜிட்டல் மயப்படுத்தப்படுவது மிகவும் அவசியமானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பரீட்சைத் திணைக்களம் டிஜிட்டல் மயப்படுத் தப்பட உள்ளது. (எ)

# தினசரி ராசி பலன் 02.01.2017

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 6.30 - 7.30 |
| | மாலை : 4.30 - 5.30 |
| ராகு காலம் | : 7.30 - 9.00 |
| குளிகன் | : 1.30 - 3.00 |
| எமகண்டம் | : 10.30 - 12.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

மேல் நோக்கு நாள்

**மேஷம்:** ஆர்வம் - செய்யும் செயல்களில் கூடுதல் ஈடுபாட்டுடன் வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்:** நஷ்டம் - அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவைக் குறைக்கும்.

**மிதுனம்:** சோர்வு - உழைப்பாலும் மனதாலும், உடலாலும் சோர்வு ஏற்படும்.

**கடகம்** : பாராட்டு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சலைக் குறைத்தால் உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் கிடைக்கும். சந்திராஷ்டமம் : பூசம், ஆயில்யம்

**சிம்மம்** :ஓய்வு - உழைப்பினால் உண்டான களைப்பு நீங்கி ஓய்வு கிடைக்கும்.

**கன்னி:** உயர்வு - அனைத்துக் காரியங்களிலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு கிடைக்கும்.

**துலாம்:** முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களும் முன்னேற்றம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும்.

**தனுசு:** ஈகை - மற்றவர்களின் மீது இரக்கம் காட்டுவீர்கள்.

**மகரம்:** இரக்கம் - இன்று உங்களின் இதயத்தில் இரக்கம் மிகும் நாள்.

**கும்பம்:** யோகம் - அதிர்ஷ்டம் அழையா விருந்தாளிகளாக வீட்டு வாசல் கதவுகளைத் தட்டும் யோகம் தரும் நன்னாள்.

**மீனம்:** உற்சாகம் - அனைத்துக் காரியத்திலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

# 2017 ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்

'எண்கள் எதையும் செய்யும்'
2017ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்
அன்பான வாசகர்களே, பிறந்த திகதி தெரியாதவர்கள் தங்களது ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

## பொதுப்பலன்

இந்த ஆண்டு தன்பலம் தனக்கே தெரியும் என்பதுபோல ஒவ்வொருவரும் மிக உத்வேகமாக தனது பணிகளை கவனிக்க துவங்கவிருப்பதால் உற்பத்தித்துறை மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் பெறும். அரசாங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக வந்து குவியும் மக்களுக்கு. கால்நடைகள் அதிகரிக்கும். நில விற்பனை பெருகும். சாதாரண பதவியில் இருப்போர் தமது விடாமுயற்சியால் நம்பமுடியாத ஏற்றங்களை அடைவர். கண் சம்பந்தமான நோய்கள் பலருக்கு வரலாம். இதற்கான முன்னெச்சரிக்கை அவசியம். அதிகளவில் துன்புறுத்தி வந்த நோய்கள் அகன்றுவிடும். ஆசாரமாக நடந்து ஆண்டவன் பற்றுடையவர்கள் அதிக அளவில் ஆனந்தமான வாழ்வை பெறுவர். பொதுப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்ட பலர் அரசாங்க திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் அதிகமான உதவிகரமாக இருப்பதால் மக்கள் கூடுதல் பலன்களை வெற்று மகிழ்வர்.

குறிப்பாக உலகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெறும். பொருளாதார ஏற்றத்தை அள்ளிக் குவிக்கும். நாட்டின் தலைவர்கள் உலக மத்தியில் போற்றப்படும் அளவுக்கு அரசின் திட்டங்களை வகுத்து செயற்படுவர். இந்த ஆண்டின் துவக்கம் 1ஆம் எண்ணிலும், ஞாயிறு அன்று துவங்குவதாலும், 1.1.2017 இன் கூட்டு எண் 3-ஆக வருவதாலும், எல்லா இடங்களிலும் நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு மிகுந்து காணப்படுவதால் தேசத்தில் விரோதத்தை ஏற்படுத்துவோர் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். நாட்டின் பெயர் எண் 1ஆக வரும் நாடுகளும், 3ஆம் எண்ணைக் கொண்ட நாடுகளும் உலக மத்தியில் பெரும் செல்வாக்கை நிலை நாட்டும்.

மேலும் இந்தியாவின் பொருளாதார ஏற்றம் வானளவில்உயரும். இரும்பு, வெற்றோலிய உற்பத்தி, புடைவைத் தொழில், மருந்து, மருத்துவ நிலையங்கள், கல்வி, அரசாட்சி கொடி கட்டிப் பறக்கும். மொத்தத்தில் நல்லாட்சியாளர்களின் நிலை நினைத்துப் பார்த்திராத அளவுக்கு உயர்ந்திடும்.

## எண் 6

- 6, 15, 24 போன்ற திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயரின் முதல் எழுத்தாக U, V, W - ஐ பெற்றவர்களுக்கும், பெயர் எண் 6 உள்ளவர்களுக்கும், இந்த வருடம், எதிர்பார்க்கும் எந்த விடயமும் தங்களுக்கு சாதகமாகவே முடியும்.
- எடுத்துக்கொண்ட விடயங்களில் எல்லாம் பணம் வரும் நேரமாக உள்ளது. கடன்கள் அனைத்தும் அடைக்கப்பட்டு நிம்மதி பெருமூச்சு விடுவீர்கள்.
- எதிர்பாராத சொந்தங்கள் மூலம் மகன், மகளுக்கு மனம் நிறைந்த மங்கல காரியங்கள் நடைபெறும்.
- உடல்நிலையில் எந்த நேரமும் சுறுசுறுப்புத்தான். இதனால் வீட்டிலிருப்போரும் நிம்மதி பெறுவர்.
- அரசாங்கத்திடம் எதிர்பார்த்து காத்திருந்த கடன் தொகைகள், புதிய நிலம், வாகனம், தொழிலுக்கேற்ற சரியான பங்குதாரர்கள் தொழிலதிபர்களுக்கு உண்டு.
- சிறு வியாபாரிகள் கூட பெரியளவில் விற்பனை செய்து பணத்தை அள்ளிக் குவிப்பர். உணவகங்கள் உயர்வைத் தரும்.
- பணியாளர்கள் நினைத்தது போல் பதவி உயர்வு, பணிமாற்றம், விரும்பிய கடன் தொகைகள் கிடைக்கப்பெற்று உயர்வடைவர்.
- அசாதாரணமான பதவிகளை எளிதில் அடைந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆற்றுவர் அரசியல்வாதிகள்.
- எதிர்பாராத வெளிநாட்டு ஒப்பந்தங்கள், பரிசுகள், பாராட்டுக்கள் எல்லாம் கிடைத்து நல்ல முன்னேற்றம் பெறுவர் கலைஞர்கள்.
- அதிக ஆதாயம் தரும் பயிர்களை உற்பத்தி செய்து, வெகுவான லாபம் பெறுவதுடன், நினைத்த நிலங்களையும் வாங்கி மகிழ்வர் விவசாயிகள்.
- பெண்களின் மனம்போல் மாப்பிள்ளை கிடைப்பதுடன், குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு அக்குறையும் தீர்க்கப்படும்.
- வெளியுலகில் தங்கள் வெற்றிகளை பற்றிப் பிறர் பேசுவதைப் பார்த்து எண்ணத்தில் எழுச்சியடைவர் மாணவர்கள்.



கலாநிதி ஜே.என்.எஸ்.செல்வன் Ph.D.,
எண் கணித ஆலோசகர்
வாஸ்து நிபுணர்.நிலத்தடி நீர் நிபுணர்.
Email : jnsnumerro@yahoo.co.in

# காடுகளை அழிப்போருக்கு பாதுகாப்பு; வனவளத் திணைக்களம் வழங்குகிறது

## மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

காடுகளை பாதுகாக்க வேண்டிய வனவள பாதுகாப்புத் திணைக்களம் முல்லைத்தீவில் பெரியளவில் காடுகளை அழிப்போரை பாதுகாக்கும் பணியையே செய்து வருகின்றது.

இவ்வாறு வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எமது மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அத்தியாவசிய தேவைக்காக ஒரு தடி வெட்ட முடியாத அளவுக்கு வனவள பாதுகாப்புத் திணைக்கள பணியாளர்கள் தடை போடுகின்றனர்.

ஆனால், மாவட்டத்தில் 5 இற்கும் மேற்பட்ட இடங்களில் சட்டத்துக்கு மாறாக மரங்கள் வெட்டப்பட்டு வனவளம் அழிக்கப்படுகின்றமையை வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மரங்களை அழிப்போருக்குப் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் காடுகள் அழிக்கப்பட்ட இடங்கள் மற்றும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இடங்கள் ஆகியவற்றின் ஆதாரங்களைத் திரட்டி வருகிறோம்.

இது குறித்த விரிவான அறிக்கையை 2017 தை மாத முற்பகுதியில் வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு பொது மக்களின் கையொப்பங்களுடன் நேரிலும் தபால் மூலமாகவும் அனுப்பி வைப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

முள்ளியவளை, குமாரபுரம் பகுதிகளில் மிகப் பெறுமதியான காட்டு மரங்களை ஒரு சிலர் தங்கள் சுயதேவைக்காக வெட்டிய போது வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் பார்த்துக் கொண்டிருந்தனர். மக்களோடு இணைந்து பெரும் பிரயத்தனங்களின் பின்னர் அந்த காடழிப்பைத் தடுத்து நிறுத்தினோம்.

தற்போதும் உடையார்கட்டு, சிறாட்டிகுளம், பனங்காமம்பற்று உள்ளிட்ட மாவட்டத்தில் 5 பிரதான இடங்களில் பெருமளவு காடுகள் கண்மூடித்தனமாக வெட்டி அழிக்கப்பட்டுவருகின்றன.- என்றார். (ஐ)

## மாகாண உறுப்பினர் அகிலதாஸ் நிதி ஒதுக்கீடு:

# 102 வேலைத் திட்டங்களுக்காக ரூ.45 லட்சத்து 46 ஆயிரம் செலவு

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் 2016 ஆம் ஆண்டு வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தலா 60 லட்சம் ரூபாவில் மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் முதற்கட்டமாக 45 லட்சத்து 46 ஆயிரம் ரூபா செலவில் 102 வேலைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்.

வடமாகாணத்தில் பரவலாக 46 சுயதொழில் முயற்சிக்கு 14 லட்சத்து 561 ஆயிரம் ரூபாவும் 8 பொருளாதார உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்கு 9 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் 41 சமூக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்கு 15 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் ஒரு நீர்ப்பாசன விவசாய வசதி அபிவிருத்திக்கு 40 ஆயிரம் ரூபாவும் 6 சமய கலாசார மற்றும் விளையாட்டு அபிவிருத்திக்கு 5 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக் கியுள்ளார்.

இந்த வேலைத்திட்டங்களில் சுயதொழிலுக்காக 14 பேருக்கு தையல் இயந்திரங்களும் கோழி வளர்ப்புக்கு 31 பேருக்கு கோழிக் கூடுகளும் 11 மாணவர்களுக்கு சைக்கிள்களும் விவசாயத் தேவைகளுக்கு (கிணறு, தண்ணீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி) 9 பேருக்கும் நிதியுதவி என்பன வழங்கப்பட்டன.

சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகிய 24 பொது அமைப்புக்களுக்கு தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றை வாங்குவதற்கும் 14 பாடசாலைகளுக்கு கல்வி அபிவிருத்திக்கும் மற்றும் பொலிஸ் நிலையம், ஆயுர்வேதம், விவசாய சம்மேளனம், மயானம், வீதிகள், மலசல கூடங்கள் ஆகியனவற்றின் அபிவிருத்திக்கும் நிதி வழங் கப்பட்டுள்ளது.

(இ-59)

# கஞ்சாவைக் கடத்த முற்பட்ட மணற்காடு இளைஞர் கைது



வடமராட்சி, ஜன.02

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக்கடத்திச்செல்லப்பட்ட 1.470 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் மணற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை காங்கேசன்துறை பிராந்தியப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து கஞ்சா கடத்தப்படுவதாக காங்கேசன் துறைபிராந்தியப்பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்கவுக்கு இரகசிய தகவல்கிடைத்தது. அதன் அடிப்படை யில் நேற்று மாலை வல்லை வெளிப் பகுதி யில் பொலிஸாரின் விசேட அணி ஒன்று கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது.

இதன்போது சந்தேகத் திற்கிடமான முறையில் சென்ற இருவரை பொலிஸார் விசாரிக்க முற்பட்டனர். அவர்களில் ஒருவர் தப்பியோடியுள்ள நிலையில் மற்றையவர் அகப்பட்டார். அவரிடமிருந்து 1.470 கிலோ கிராம் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரும் மேற்படி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார். கைதுசெய்யப்பட்ட நபர் மணற்காட்டைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் எனவும் அவரிடம் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பருத்தித்துறைப் பொலிஸார்தெரிவித்தனர்.

இதேவேளை- தென்னிலங்கையின் இரு வேறு இடங்களிலும் நேற்று 10 கிலோ கஞ்சாவுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

வெலிசறைகடற்படையினர் பேலியகொட விசேட அதிரடிப் படையுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் 9 கிலோ கஞ்சாவுடன் இருவரை மடக்கிப் பிடித்துள்ளார்.

கைதான இருவரும் கந்தானைப் பொலிஸாரிடம்கையளிக்கப்பட்டனர். கஞ்சாவும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புத்தளம் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்துமேற்கொண்ட இந்த நடவடிக்கை யின் போது எழுவன்குளம் பகுதி யில் ஒரு கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப் பட்டனர். இவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-40)

# யாழ். தமிழ் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம்

சுன்னாகம், ஜன.02

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக ஆட்சிக் குழுக் கூட்டம் கோலம், இல. 90, ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் என்ற முகவரியில் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பாரதி விழா , வள்ளுவர் விழா தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன.

அனைத்து நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொதுச் செயலாளர் ச.லலீசன் அறிவித்துள்ளார்.

(ஐ-54)

# சித்த மருத்துவ புகுமுக மாணவர் அறிமுக நிகழ்வு

சுன்னாகம்,ஜன.02

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவு அலகுக்கு 2015- 2016 ஆம் கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைதடியிலுள்ள சித்தமருத்துவப் பிரிவு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக் கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (ஐ-54)

# வாசகர் கருத்து மேடை



## காலை 7.30 மணிக்கே பாடசாலை; ஒற்றைக்காலில் கல்வி அமைச்சர்!

யார் என்ன சொன்னாலும் நான் நினைத்ததை நடத்தியே தீருவேன் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ஒற்றைக்காலில் நிற்கிறார். பாடசாலைகளை காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பது என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லையென வடக்கு கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

தினமும் பத்திரிகைகளில் காலை 7.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிப்பதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் பற்றி மக்கள் அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர். மக்களின் கருத்துக்கள் பற்றித்துளியளவும் கவலைப்படாமல் தான் நினைத்ததை அமுல்படுத்தத் துடிக்கும் கல்வி அமைச்சரை மக்கள் பிரதிநிதி என்று கூறலாமா? கூற முடியுமா?

ஜனநாயக ஆட்சியில் ஒருவருக்கு வாக்களித்து அவரை ஒரு பதவிக்கு தெரிவு செய்து விட்டால் பதவிக் காலம் முடியும் வரை அவரை எதுவும் செய்ய முடியாது என்ற நிலை காணப்படுகிறது. ஜனநாயகத்தில் காணப்படும் குறைபாடுகளில் இது முதலிடம் வகிக்கிறது.

ஆனால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் ஒருவரை பதவியிறக்கலாம் என்ற ஏற்பாடும் ஜனநாயகத்தில் உள்ளது. வடக்கு மாகாண அவைத் தலைவர் உட்பட மாகாண சபை உறுப் பினர்கள் பாடசாலைகளை காலை 8 மணிக்கு ஆரம்பிப்பதே பொருத்தமானது என மாகாண சபையில் கூறியும் அதனையும் மாகாண கல்வியமைச்சர் ஏற்க மறுத்து விட்டார். வடமாகாண கல்வியமைச்சர் யாருடைய நலன் கருதிச் செயற்படுகிறார் என்ற கேள்வியும் எழுகிறது.

இவ்வாறு தான்தோன்றித்தனமாகச் செயற்படும் அமைச்சர் மீது கூட்டமைப்போ மாகாண சபையோ நடவடிக்கை எடுக்குமா? மக்களின் துயர் துடைக்க கூட்டமைப்போ மாகாண சபையோ முன்வருமா...?

ந.பரமேஸ்வரன்.

## யாழ். நகரின் மத்தியில் வேண்டாம் கடைத்தொகுதி

யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மையில் போதனா வைத்தியசாலைப் பக்கமாக மின்சார சபை இயங்கும் வளவினுள் வியாபாரிகளுக்கான நிரந்தரக் கடைத் தொகுதி மாநகர சபையால் அமைக்கப்பட்டு வருவதாக பத்திரிகை வாயிலாக அறியக் கிடக்கின்றது.

நகர மத்தியில் இவ்வாறான கடைத் தொகுதிகள் அமைவதால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறு ஏற்படுவ நுடன், நோயாளிகள் வைத்தியசாலைக்குச் செல்லும் பாதையும் இந்த நடைபாதை வியாபாரத் தொகுதியால் தடைப்படும். அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நோயாளிகளைக் காவிச் செல்லும் அன்புலன்ஸ் வாகனங்களும் இப்பாதையாலேயே பயணம் செய்வதும், மருத்துவ பீடத்துக்கான 8 மாடிக் கட்டடமும் இதன் அருகேயே அமைக்கப்படவிருப்பதாகவும் அறியக் கிடக்கின்றது.

தற்போது முனீஸ்வரன் வீதியில் இயங் கிக் கொண்டிருக்கும் கடைத் தொகுதிகளால் பெருநாள் காலங்களில் சன நெரிசல் ஏற்பட்டு பாதை தடைப்படுவது வழமையாகி விட்டது. அனைத்து பிரதான நகரங்களிலும் நகர விரிவாக்கத்தின் போது கடைத்தொகுதிகள் புறநகர்ப் பகுதியில் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

எனவே, நகர விரிவாக்கத்தில் அக்கறையுடன் செயற்படும் அரச அதிபர் உட்பட சமூக அக்கறையுடையவர்கள் அனைவரும் இந்த நகர மத்தியில் மீண்டும் பெரியளவிலான சன நெரிசலை ஏற்படுத்தும் இக்கடைத் தொகுதியை அமைப்பதைத் தடை செய்து மாற்று இடங்களில் கடைத் தொகுதியை அமைக்க ஏற்பாடு செய்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சி.சுப்பிரமணியம்
நெடுந்தீவு.

# இலங்கை அரசுக்கு எதிராக ராமேஸ்வரம் மீனவர் போராட்டம்

## படகுகளை அரசுடைமையாக்கியமையைக் கண்டித்து நடத்த முஸ்தீபு

இராமேஸ்வரம், ஜன.02

தமிழக மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட, படகுகளை இலங்கை அரசுடைமையாக்கியது. இதைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் மாநிலம் தழுவிய ரீதியில் போராட்டங்களை நடத்தவுள்ளனர்.

எல்லை தாண்டியதாகக் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள 51 தமிழக மீனவர்களை விடுதலை செய்வதாக இலங்கை அரசு சமீபத்தில் அறிவித்தது. ஆனால் கைப்பற்றப்பட்ட படகுகள் தொடர்பில் எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை.

ஓரிரு தினங்களில் மீனவர்கள் விடுதலையாவார்கள் என்று அவர்களது உறவினர்கள் நம்பிக் கையுடன் உள்ளனர்.

இந்தநிலையில் இலங்கை அமைச்சர் மஹிந்த அமரவீர, கொழும்பில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 122 படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டன என்றும் தமிழக மீனவர்கள் மட்டும் படிப்படியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் போஸ் கூறியவை வருமாறு:-



"தமிழக மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட 122 படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டன என்று இலங்கை அமைச்சர் கூறியிருக்கின்றமை மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஒவ்வொரு முறையும் படகுகள் கைப்பற்றப்படும் போது மத்திய அரசு கண்டனம் கூடத் தெரிவிக்கவில்லை.

எனவே, மத்திய அரசின் இத்தகைய மெத்தனப் போக்கைக் கண்டித்தும், இலங்கை அரசின் நடவடிக்கையைக் கண்டித்தும் தமிழகத்தில் உள்ள மீனவர்களை ஒருங்கிணைத்து மாநிலங்கள் அளவிலான போராட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன." என்றார். (எ)

## அருணாச்சல ஆட்சியை பிடித்தது பாரதீய ஜனதா!

இடாநகர், ஜன.02

அருணாச்சல பிரதேச மாநிலத்தில் ஆளும் அருணாச்சல மக்கள் கட்சி சட்டசபை உறுப்பினர்கள் பா.ஜ.க.வில் இணைந்தமையை அடுத்து அந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

அருணாச்சல பிரதேசத்தில் சட்டசபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 60. அருணாச்சல மக்கள் கட்சி சார்பில் பேமா காண்டு முதல்வராக உள்ளார். இந்தக் கட்சிக்கு மொத்தம் 43 சட்டசபை உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்நிலையில், பேமா காண்டு மற்றும் சட்டசபை உறுப்பினர்கள் சிலர் பா.ஜ.கவுக்குச் சாதகமாக நடந்து கொள்கின்றனர் எனவும் கட்சியை இணைக்க முயன்றனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டு கட்சியை விட்டு நீக்கம் செய்யப் பட்டனர். இதனையடுத்து பேமா காண்டு உட்பட 33 சட்டசபை உறுப்பினர்கள் பா.ஜ.கவில் இணைந்தனர்.

இதனால் மாநிலத்தில் பா.ஜ.க.வின் பலம் 47 ஆக உயர்வடைந்தது. அதே நேரத்தில் ஆளும் அருணாச்சல மக்கள் கட்சியின் பலம் 10 ஆகக் குறைந்தது.

தொடர்ந்து பா.ஜ.க. சபாநாயகரைச் சந்தித்து ஆட்சி அமைக்கக் கோரியதுடன் ஆதரவு சட்டசபை உறுப்பினர்களை சபாநாயகர் முன்பு நிறுத்தியது. இதனை ஏற்றுக் கொண்ட சபாநாயகர், ஆட்சி அமைக்க பா.ஜ.க.வுக்கு அழைப்பு விடுத்தார். தற்போதைய நிலவரப்படி பா.ஜ.க.வில் 47 சட்டசபை உறுப்பினர்களும் அருணாச்சல மக்கள் கட்சிக்கு 10 உறுப்பினர்களும் காங்கிரஸுக்கு 3 உறுப்பினர்களும் உள்ளனர். (எ)

## நீண்டநாள்கள் அரசியலில் நீடிக்கமாட்டார் சசிகலா!

*சுப்பிரமணியன் சுவாமி விமர்சனம்*

டில்லி, ஜன.02

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சசிகலாவின் அரசியல் வாழ்க்கை நீண்ட நாள்கள் நீடிக்காது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி விமர்சித்துள்ளார்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அவரது தோழியான சசிகலா அ.தி.மு.கவின் புதிய பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சசிகலா அந்தக்கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவியேற்றுக் கொண்டார். இந்தநிலையில் கோவையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தவை வருமாறு:-

"ஜெயலலிதாவின் தோழியான சசிகலா அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை அவர்களின் உட்கட்சி விவகாரம்.

"இருப்பினும் அவர் அரசியலில் நீண்ட நாள்கள் நீடிக்க முடியாது. சொத்துக்குவிப்பு வழக்கில் அடுத்த மாதம் இறுதித் தீர்ப்பு வெளியாகும்.

"இந்த நிலையில் சசிகலாவுக்குத் தண்டனை கிடைத்தால் அவருடைய அரசியல் வாழ்க்கை அத்துடன் முடிந்துபோகும்."- என்றார். (எ)

# தமிழக மீனவரை விடுவிப்பதற்கு மோடி செயலில் இறங்க வேண்டும்

## தி.மு.க.பொருளாளர் ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, ஜன.02

தமிழக மீனவர்களை விடுவிக்க பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளவை வருமாறு:-

"தமிழக மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளைச் சொந்தமாக்கிக்கொள்வோம் என்று இரக்கமற்ற முறையில் இலங்கை அரசு முடிவு எடுத்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. இதுவரை நடைபெற்ற 4 கட்டப் பேச்சுகளிலும் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு எவ்வித தீர்வும் காணப்படவில்லை.

குறிப்பாக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக்குநீரிணைப் பகுதியில், செயற்கையாக வரையறுக்கப்பட்ட எல்லையில் பாரபட்சமின்றி இருதரப்பும் பரஸ்பர நல்லிணக்கத்துடன் கூடிய மீன்பிடி உரிமை வேண்டும் என்று தமிழக மீனவர்களின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. அந்தக் கோரிக்கையை பிடிவாதமாக இலங்கை அரசு ஏற்க மறுக்கிறது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் கொடூந் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசு கண்டு கொள்ளவே இல்லை. இன்னும் சொல்லப் போனால் பேச்சுக்குப் பிறகுதான் தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து போதிய அழுத்தத்தைத் தமிழக அரசும் மத்திய அரசுக்கு கொடுக்க முன்வரவில்லை என்பது வருத்தமளிக்கிறது. வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறாக செயற்படுவதை இலங்கை அரசு முதலில் கைவிட வேண்டும். இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையில் முன்னின்று நடத்திய இந்திய அரசும் இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, தமிழக மீனவர்களின் படகுகளை சொந்தமாக்கிக்கொள்ளும் முடிவை மாற்றிக் கொள்ள இலங்கை அரசை வலியுறுத்தி, இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க ஆணை பிறப்பிக்கவும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு உரிய அழுத்தத்தைத் தூதரக ரீதியாகவோ, இந்திய பிரதமர் நேரில் தலையிட்டோ முடிவுகாண வேண்டும்."- என்றுள்ளது. (எ)

# தலைமைப் பதவிகளை ஏற்றனர் இந்திய இராணுவத் தளபதிகள்

டில்லி, ஜன.02

இந்திய இராணுவத்தின் 27 ஆவது தலைமைத் தளபதியாக விபின் ராவத் நேற்று முன்தினம் சனிக்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

இதேபோல், விமானப் படையின் 25 ஆவது தலைமைத் தளபதியாக வீரேந்தர் சிங் தனோவா பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாகப் பதவி வகித்த தல்பீர் சிங் சுஹாக் கடந்த சனிக்கிழமை ஓய்வுபெற்றார். அதைத் தொடர்ந்து, அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட விபின் ராவத் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். அவரிடம் தனது பொறுப்புகளை தல்பீர் சிங் சுஹாக் ஒப்படைத்தார்.

விமானப்படையின் தலைமைத் தளபதியாக பதவி வகித்த அரூப் ராஹாவும் சனிக்கிழமை ஓய்வு பெற்றார்.

இதை அடுத்து, விமானப்படையின் புதிய தலைமைத் தளபதியாக வீரேந்தர் சிங்தனோவா பதவியேற்றுக் கொண்டார்.



டில்லியில் இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய தலைமைத் தளபதியாக பதவியேற்கும் விபின் ராவத்திடம் பொறுப்பை ஒப்படைக்கிறார் அந்தப்பதவியிலிருந்து ஓய்வுபெற்ற தல்பீர் சிங் சுஹாக்.

## பீகார் சிறையில் ஐந்து கைதிகள் தப்பியோட்டம்

பீகார், ஜன.02

பீகாரின் தலைநகர் பாட்னா அருகே உள்ள புக்சர் மத்திய சிறைச் சாலையிலிருந்து 5 கைதிகள் தப்பி ஓடியுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு தப்பி ஓடிய 5 கைதிகளில் 4 பேர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் கைதிகள் சுவரில் துளை வைத்து அதன்மூலம் தப்பிச் சென்றுள்ளனர். அந்த இடத்தில் இரும்புக் கம்பி, பைப், மற்றும் வேட்டி ஆகிய பொருள்கள் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. கைதிகள் தப்பியமை தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ)

## பதவி ஏற்றுக் கொண்டார் டில்லியின் துணை ஆளுநர்



டில்லி, ஜன.02

டில்லியின் 21 ஆவது துணை ஆளுநராக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அனில் பய்ஜால் (வயது 70) நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

டில்லி ராஜ்நிவாஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநருக்கு டில்லி உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜி.ரோஹிணி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

டில்லி அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வரும் சூழலில் அவர் புதிய துணைநிலை ஆளுநராகப் பதவி ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## ட்ரம்ப் ஸ்ரைலில் சீனாவில் சேவல் சிலை!



பீஜிங், ஜன.02

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்ப்பை சித்திரிக்கும் விதமான சேவல் சிலை ஒன்று சீனாவில் வைக்கப்பட்டிடுள்ளது.

தையுயான் பகுதியில் வணிக வளாகம் முன்னிலையில் இந்த சேவல் சிலை நிறுவப்பட்டுள்ளது. முட்டை வடிவில் சேவல் சிலை செதுக்கப்பட்டு, அதற்கு ரொனால்ட் ட்ரம்ப் போல சிகை அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிலை 23 அடி உயரம் கொண்டுள்ளது.

இதுதொடர்பில் சிலை வடிவமைப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்:-

''சீன முறைப்படி, எதிர்வரும் 28ஆம் திகதி புத்தாண்டு பிறக்கிறது. இந்த ஆண்டு சேவல் ஆண்டாகப் பிறப்பதையும் அமெரிக்காவுக்கு புதிய ஜனாதிபதி பொறுப்பேற்பதையும் ஒப்பிட்டு இந்தச்சிலை உருவாக்கப்பட்டது.'' -என்றார். (எ)

# இரவு கேளிக்கை விடுதியில் மர்ம நபர் சூடு; 35 பேர் பலி!

## இஸ்தான்புல் நகர புத்தாண்டு விழாவில் பயங்கர சம்பவம்

இஸ்தான்புல், ஜன.02

துருக்கி தலைநகர் இஸ்தான்புல் நகரில் கேளிக்கை இரவு விடுதியில் நடைபெற்ற புத்தாண்டு விழா கொண்டாட்டத்தில் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 35 பேர் துடிதுடித்து உயிரிழந்தனர்.

இஸ்தான்புல் நகரில் அமைந்துள்ள இந்தப் பிரபல கேளிக்கை இரவு விடுதி, உள்நாட்டினரும், வெளிநாட்டினரும் அடிக்கடி ஒன்று கூடி விருந்து நிகழ்ச்சிகளை நடத்தும் பிரசித்தி பெற்ற இடம்.

பிறந்த புத்தாண்டை வரவேற்க இந்த இரவு விடுதியில் நேற்று முன்தினம் இரவு சுமார் 500 பேர் திரண்டு, மகிழ்ச்சியுடன் காத்திருந்தனர். நள்ளிரவு 12 மணிக்கு



மேல் ஆடிப் பாடி கொண்டாட்டத்துடன் உச்சகட்ட உற்சாகத்தில் அவர்கள் திளைத்திருந்தனர். இதன் போது, நேற்று முன்தினம் நள்ளிரவு தானியங்கி ரக துப்பாக் கியுடன் உள்ளே நுழைந்த மர்மநபர், எதிர்பட்டவர்களை நோக்கி கண்மூடித் தனமாகச் சுட்டான்.

இதில் 35 பேர் சம்பவ இடத்திலேயே விழுந்து துடி துடித்து உயிரிழந்தனர், 40 இற்கும் அதிகமானவர்கள் காயங்களுடன் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்தநிலையில், இந்தத் தாக்குதலை நடத்தியவனை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர் என்று இஸ்தான்புல் ஆளுநர் வாசிப் சாஹின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் கொடூரத் தாக்குதல் சம்பவத் துக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேவையான அவசர உதவிகளை வழங்க அமெரிக்க அரசு தயாராக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

## பக்தாத் சந்தையில் தாக்குதல்; அப்பாவி மக்கள் 18 பேர் பலி!



பக்தாத், ஜன.02

ஈராக்கின் மத்திய பக்தாத்தில் உள்ள அல்-சினெக் பகுதியில் உள்ள சந்தையில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த 2 குண்டுகள் வெடித்தன. இதில், அப்பாவி மக்கள் 18 பேர் உயிரிழந்தனர்; 38 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பல கடைகள் பெரியளவில் சேதமடைந்தன.

மேலும் சந்தைக்குப் பொருள்கள் வாங்கச் சென்றிருந்த பொது மக்கள் தூக்கி வீசப்பட்டு உடல் உறுப்புகள் சிதைந்த நிலையில் உயிருக்குப் போராடிய நிலையில் உள்ளனர். இதே வேளை, இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், அனைத்து வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கும் ஐ.எஸ். அமைப்பு பொறுப் பேற்றுள்ளதால், இந்தத் தாக்குதலையும் அவர்களே நடத்தியிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)



இந்தோனேசியா கடல் பகுதியில் நேற்று தீவிபத்தில் சிக்கிய படகில் சென்ற 5 பேர் பலியாகினர். 17 பேர் காயமடைந்தனர். 98 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். தலைநகர் ஜகார்த்தாவின் வடபகுதியில் உள்ள முவாரே ஆங்கே துறைமுகத்தில் இருந்து நேற்றுக் காலை நூற்றுக்கும் அதிகமான பயணிகளை ஏற்றியபடி ஒரு இயந்திரப் படகு ஆயிரம் தீவுகள் பகுதிக்குச் சென்றது. புறப்பட்ட சிறிது நேரத்தில் அந்தப் படகின் இஞ்ஜின் பகுதியில் இருந்து வந்த தீப்பிழம்பு, படகு முழுவதும் பரவியது. இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த பயணிகளில் பலர் உயிர் பயத்தில் கடலுக்குள் குதித்துத் தப்பிப் பிழைத்தனர். எனினும், வேகமாகப் பரவிய தீயில் சிக்கி 5 பேர் உடல்கருகி உயிரிழந்தனர், 17 பேர் படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்து விரைந்து வந்த கடலோரக் காவல் படையினர் கடலில் நீந்தியபடி உயிருக்குப் போராடிய 98 பேரை பத்திரமாக மீட்டனர்.

## நெரிசலில் சிக்கி 80 பேர் காயம்

### புத்தாண்டு நிகழ்வில் ஆஸியில் துயரம்

சிட்னி, ஜன.02

ஆஸ்திரேலியாவில் புத்தாண்டு விழாவைக் கொண்டாடிய இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 80 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஆஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதியின் விக்டோரியா மாநிலத்தில் உள்ள லோர்னே நகரின் கிராண்ட் கலையரங்கத்தில் புத்தாண்டையொட்டி, இசை மற்றும் கலைவிழா நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் பங்கேற்க ஆயிரக்கணக்கான மக்கள் நெரிசலில் சிக்கி மிதிபட்டதில் 80 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். (எ)

# ஏவுகணை பலத்தை மேலும் விஸ்தரிக்கிறது வடகொரியா!

பியாங்யாங், ஜன.02

தடை செய்யப்பட்ட நெடுந்தூர ஏவுகணைகளைத் தயாரிக்கும் பணிகள் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளன என்று வடகொரிய ஜனாதிபதி கின் ஜாங் உன் நேற்று தெரிவித்துள்ளார்.


வட கொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை பொருட்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களைப் புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

அந்த நாடு தொடர்ந்து 3 முறை அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி உள்ளது. அதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அதிரடியாக அணு குண்டை விட பல மடங்கு சக்திமிக்க ஹைதரஜன் குண்டை வெடித்து சோதித்தது. இதுவும் அணு குண்டு வகையில்தான் கணக்கில் கொள்ளப்படுகிறது. அதன்படி அந்த நாடு கடந்த ஆண்டுவரை 4 முறை அணுகுண்டு சோதனைகளை நடத்தி உள்ளது என சர்வதேச நாடுகள் பதிவு செய்துள்ளன.

இதன்காரணமாக, வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையும், அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும், தற்காப்பு என்ற பெயரில் வட கொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை கடத்தி வருகிறது.

எனினும், மாதந்தோறும் ஒரு முறையோ, இருமுறையோ இந்த ஏவுகணைப் பரிசோதனைகளை மேற்கொள்ள வட கொரியா தவறுவதில்லை. வடகொரியாவின் இந்த ஆணவத்துக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையை பல நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தின.

இதன் அடிப்படையில் வடகொரியா மீது ஐ.நா.சபை சமீபத்தில் புதிய தடைகளை விதித்தது. இந்தநிலையில், புத்தாண்டு தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றிய வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன், தடைசெய்யப்பட்ட நெடுந்தூர ஏவுகணைகளைத் தயாரிக்கும் பணிகள் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவைத் தாக்கும் நோக்கத்தில்தான் இதேபோன்ற நெடுந்தூர ஏவுகணைகளை வடகொரியா தயாரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)





வடமாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற மர நடுகை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டி பிரதேசசபைச் செயலாளர் அ. வினோராஜ் கொற்றாவத்தை கலைவாணி முன்பள்ளியின் ஆசிரியை செல்வி ஜெயிதாவுக்கு மரக்கன்று ஒன்றை வழங்குவதையும் கொற்றாவத்தை றேஞ்சல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இளைஞர் மரநடுகை முயற்சியில் ஈடுபடுகின்றமையையும் படங்களில் காணலாம். (இ-30)








கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 'தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத் திட்டத்தின்' கீழ் கால்நடை வளர்ப்போருக்குப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

முசலி மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கால்நடை வளர்ப்போர் 40 பேருக்கு கால்நடைகளை வளர்ப்பதற்குத் தேவையான பொருள்கள் இதன்போது வழங்கப்பட்டுள்ளன.

அந்தப் பொருள்களை வடக்கு மாகாணசபை உறுப்பினர் வைத்தியர் ஜீ.குணசீலன் மற்றும் உயிலங்குளம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், முசலி கால்நடை வைத்திய அதிகாரிகள் ஆகியோர் இணைந்து வழங்கினர். (ஐ)



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் ஒளி விழாவும், புலமைப் பரிசில் பரீட்சையில் 2016 இல் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு விழாவும் அண்மையில் பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றன. இந்த நிகழ்வுகள் கல்லூரி முதல்வர் திருமதி புஷ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன. (ஐ-21)




சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழிலாக உணவு தயாரித்து விநியோகிக்கும் பணியில் ஈடுபடும் பெண்களுக்கு அவர்கள் மேலும் வினைத்திறனுடன் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு தொகுதி சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா இவற்றை வழங்கினார். (ஐ-21)









வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். (ஐ-53)





மிளிர்வுக்குக் கை கொடுப்போம் அமைப்பு கிளிநொச்சி நகருக்கு உட்பட்ட செல்வநகர் மற்றும் திருநகர் பிரதேசங்களில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கற்றல் உபகரணங்கள் மற்றும் சப்பாத்துக்களை நத்தார் தினத்தை முன்னிட்டு வழங்கியுள்ளது. இவர்கள் அடுத்த கட்டமாகத் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கைதடி விழிப் புணர்வு அற்றோர் இல்லத்துக்கு உதவிகளைச் செய்துள்ளனர். (ஐ-21)

# 'மாமனிதர் குமார்' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம்: வல்வை அணி வெற்றி; சென். சேவியர் அணி வெளியே!





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் டிசெம்பர் 24ஆம் திகதி ஆரம்பமாகி நடந்து வருகிறது.

7வீரர்கள் பங்குபற்றும் 'அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்' ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக 'பி' அணியும், வல்வை விளையாட்டுக் கழக அணியும் மோதின.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சமபலம் கொண்ட அணிகள் என்பதால் ஆரம்பமே அதிரடியாக அமைந்தது. இரு அணிகளும் முதலில் கோலை அடிப்பதற்காக முண்டியடித்து விளையாடின. இதனால் இரு அணிகளதும் தண்டப் பரப்புக்குள் பந்து அடிக்கடி பாய்ந்த வண்ணம் இருக்க எல்லை தாண்டிய நிலையில் முன்கள வீரர்கள் எச்சரிக்கப்பட்டமையால் பல கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் வீணடிக்கப்பட்டன.

13ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியின் முன்கள 20ஆம் இலக்க வீரர் தனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பைத் தண்டப்பரப்புக்கு வெளியே இருந்து அடித்தபோது அது தரையோடு தரையாகச் சென்று கோல் கம்பத்துக்குள் முறைப்படி புகுந்து செல்ல முதலாவது கோலை சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி பதிவு செய்தது.

உடனடியாக வல்வை விளையாட்டுக் கழக அணியினர் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்று அடுத்த கணமே தமக்குரிய முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்தும் அவர்கள் மிக வேகமான விளையாட்டை நகர்த்திக் கொண்டிருக்க சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியின் தற்காப்பு வீரர் பந்தைத் தனது கோல் காப்பாளருக்குக் கடத்திக் கொடுக்க அது கோல் காப்பாளரின் தலைக்கு மேலால் சென்று ஒண் கோலாகியது. அது வல்வை விளையாட்டுக் கழக அணிக்குரிய இரண்டாவது கோலாகப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு வல்வை விளையாட்டுக் கழக அணியின் ஆதிக்கத்துடன் முதல் பாதி ஆட்டம் 5.32 மணிக்கு முடிவுக்கு வந்தது.

5.37 மணிக்கு ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக 'பி' அணி வீரர்கள் பலத்த தாக்குதல் வியூகத்துடன் களம் புகுந்து எதிர் அணியின் கோல் பரப்பை பலதடவைகள் ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

ஆனாலும் அவர்கள் எல்லை தாண்டிய நிலையிலிருந்து பந்தைப் பெற்று கோல் போட முயற்சித்தமையால் அந்த கோல் போடும் வாய்ப்புக்கள் பலன் இன்றிப் போயின.

34ஆவது நிமிடத்தில் வல்வை அணியினர் தமக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி மூன்றாவது கோலையும் பெற்றுக் கொண்டனர். இறுதிவரை போராடிய சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்தினர் இரண்டாம் பாதி ஆட்டத்தில் எந்தவித கோலையும் போடாமையால் தோல்விக்குத் தள்ளப்பட்டனர்.

இறுதியாகப் போட்டி 5.59 மணிக்கு முடிவுக்கு வரும்போது வல்வை விளையாட்டுக் கழக அணி3 கோல்களைப் பெற்றுக்கொண்டதனால் போட்டியில் வெற்றி பெற்றுத் தொடரில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. சக்கோட்டை விளையாட்டுக் கழக 'பி' அணி ஒரு கோலை மட்டும் பெற்று போட்டியில் தோல்வியுற்றதால் தொடரிலிருந்து வெளியேறியது.

## ஆஸ்திரேலியா அணிக்கு பயிற்சியாளர் பொன்ரிங்



இலங்கை அணிக்கு எதிரான ரி 20 கிரிக்கெட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் உதவிப் பயிற்சியாளராக பொன்ரிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி பெப்ரவரி மாதம் ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து மூன்று ரி 20 கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது.

முதல் போட்டி 17ஆம் திகதியும், 2ஆவது போட்டி 19ஆம் திகதியும், 3ஆவது மற்றும் கடைசிப் போட்டி 22ஆம் திகதியும் நடக்க இருக்கின்றன.

23ஆம் திகதி ஆஸ்திரேலிய அணி இந்தியாவில் டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது. 22ஆம் திகதி இலங்கை அணியுடனான போட்டியை முடித்துக்கொண்டு 23ஆம் திகதி இந்தியாவுக்கு ஆஸ்திரேலிய அணி வருவதற்கு வாய்ப்பில்லை.

இதனால் ரி 20 அணிக்கு முற்றிலும் மாறுபட்ட அணியை ஆஸ்திரேலியா ஏற்பாடு செய்துள்ளது. முதன்மை அணி இந்தியாவுக்கு வந்து விடும். அந்த அணியோடு பயிற்சியாளர் டேரன் லீமென் மற்றும் துணைப் பயிற்சியாளர்கள் இந்தியா வந்து விடுவார்கள்.

இதனால் இலங்கை அணிக்கு எதிரான ரி 20 தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர்களாக லாங்கர், கிலெஸ்பி ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவரும் தலைசிறந்த வீரருமான ரிக்கி பொன்ரிங் உதவிப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேசப் போட்டிகளில் 27ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ள அவர், மூன்று உலகக் கோப்பைக் கிண்ணத்தை வாங்கிய ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய கிரிக்கெட் சபைக்கு எதிராக வழக்குத் தொடர்கிறது பாகிஸ்தான்

இந்தியா – பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் ரத்துச் செய்யப்பட்டதால் இந்திய கிரிக்கெட் சபை மீது வழக்குத் தொடருவதற்குப் பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே 2015ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை 6 போட்டித் தொடர்களை நடத்துவதற்கு இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் முடிவு செய்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஆனால் பாகிஸ்தான் ராணுவம் எல்லையில் அத்துமீறி தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்ததால் கிரிக்கெட் போட்டித் தொடருக்கு இந்திய அரசு அனுமதி வழங்கவில்லை. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை போட்டித் தொடரை நடத்த வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபையிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அதற்கு இந்திய கிரிக்கெட் சபை எந்தப் பதிலும் கூறவில்லை.

இதனால் கிரிக்கெட் போட்டித் தொடர் ரத்தாகியது. இதன்மூலம் தங்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறி வந்தது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபை மீது நஷ்டஈடு கோரி வழக்குத் தொடருவதற்கு பாகிஸ்தான் முடிவு செய்து இருக்கிறது. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் மூத்த நிர்வாகி சகாரியர்கான் கூறுகையில் –

கிரிக்கெட் போட்டித் தொடரை நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் சபை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது. ஆனால் விளையாடுவதற்கு மறுத்து வருகிறது. இதனால் எமக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்காக நஷ்டஈடு கேட்டு இந்திய கிரிக்கெட் சபை மீது வழக்குத் தொடருவதற்கு முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடந்து வருகின்றன.

இதற்கான அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. விரைவில் லண்டன் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும். – என்றார்.

## காலமானார் இம்தியாஸ் அஹமது

பாகிஸ்தானின் முதல் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் இடம்பிடித்திருந்த மூத்த வீரரான இம்தியாஸ் அஹமது தனது 88ஆவது வயதில் மரணமடைந்தார்.

1952ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் டெல்லியில் நடைபெற்ற டெஸ்டில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் அணி முதன் முதலாக டெஸ்ட் அரங்கில் கால்பதித்தது. அந்த அணியில் இம்தியாஸ் அஹமதும் ஒருவர். இவர் பாகிஸ்தான் அணிக்காக 41 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

88 வயதாகும் இவர் சுகவீனம் காரணமாக லாகூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

டெஸ்ட் போட்டிகளில் 2079 ஓட்டங்கள் சேர்த்துள்ள அவர், 1955இல் நியூஸிலாந்துக்கு எதிராக 209 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

## இலங்கை – தென்னாபிரிக்கா மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

தென்னாபிரிக்கா, இலங்கை கிரிக்கெட் அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று கேப்டவுனில் தொடங்குகிறது.

இலங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாடுகிறது. போர்ட் எலிசபெத்தில் நடந்த முதல் டெஸ்டில் தென்னாபிரிக்கா அணி 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் 1:0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா அணி முன்னிலையில் இருக்கிறது.

கேப்டவுனில் இன்று தொடங்கும் 2ஆவது டெஸ்ட் போட்டியிலும் வென்று தொடரைக் கைப்பற்றும் ஆர்வத்தில் தென்னாபிரிக்கா அணி உள்ளது.

இந்தத் தொடரை இழக்காமல் இருப்பதற்கு இலங்கை அணி வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

# 2016ஆம் ஆண்டின் கிரிக்கெட் சாதனைகள்

**டெஸ்ட் போட்டிகள்**

2016ஆம் ஆண்டில் மொத்தம் 47 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் அதிக வெற்றிகளைக் குவித்த அணி என்ற மகத்தான பெருமையை இந்திய அணி பெற்றுள்ளது.

12 டெஸ்டில் விளையாடி அதில் 9இல் வெற்றியும், 3இல் சமநிலையும் கண்டது. 2016ஆம் ஆண்டில் தோல்வியைச் சந்திக்காத ஒரே அணி இந்திய அணிதான். அதே சமயம் வெற்றிப் பக்கமே செல்லாத அணி ஸிம்பாப்வே அணி. (4 டெஸ்டில் ஆடி அனைத்திலும் தோல்வி). ஆஸ்திரேலிய அணி 11 டெஸ்டில் ஆடி 5 வெற்றி, 5 தோல்வி, ஒரு சமநிலையைப் பெற்றுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் மொத்தம் 90 சதங்கள் பதிவாகின. இதில் பாகிஸ்தானின் அசார் அலி (302 ஓட்டங்கள்), இந்தியாவின் கருண் நாயர் (303 ஓட்டங்கள்) ஆகியோர் முச்சதம் அடித்ததும் அடங்கும். விராட் ஹோக்லி (இந்தியா), மொயீன் அலி (இங்கிலாந்து), ஸ்டீவன் ஸ்மித் (ஆஸ்திரேலியா) ஆகியோர் அதிகபட்சமாக தலா 4 சதங்கள் அடித்துள்ளனர்.

அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களின் வரிசையில் இங்கிலாந்தின் ஜோ ரூட்டும் (1,477 ஓட்டங்கள்), அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர்களில் இந்தியாவின் அஸ்வினும் (72 விக்கெட்டுக்கள்) முதலிடம் பெற்றுள்ளனர். அஸ்வின் இன்னிங்ஸில் 5க்கு மேல் விக்கெட்டுக்களை 8 முறை வீழ்த்தியதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**ஒருநாள் போட்டிகள்**

2016ஆம் ஆண்டில் மொத்தம் 99 ஒரு நாள் போட்டிகள் நடந்துள்ளன.

அதிகபட்சமாக ஆஸ்திரேலிய அணி 29 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 17இல் வெற்றியையும், 11இல் தோல்வியையும் சந்தித்துள்ளது. ஒரு ஆட்டத்தில் முடிவு இல்லை. இந்திய அணி 13 ஒரு நாள் போட்டிகளில் களம் இறங்கி 7இல் வெற்றியும், 6இல் தோல்வியும் கண்டுள்ளது.

அதிக ஓட்டங்கள் குவித்தவர்களில் ஆஸ்திரேலியாவின் டேவிட் வார்னரும் (1,388 ஓட்டங்கள்), அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர்களில் ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அடம் ஜம்பாவும் (30 விக்கெட்டுக்கள்) முதலிடம் வகிக்கிறார்கள். இந்தியத் தரப்பில் அதிகபட்சமாக விராட் ஹோக்லி 10 ஆட்டங்களில் விளையாடி 3 சதங்கள் உட்பட 739 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார்.

68 சதங்கள் அடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆஸ்திரேலிய அணியின் துணை கப்டன் டேவிட் வார்னர் 7 சதங்கள் விளாசி அமர்க்களப்படுத்தி இருக்கிறார்.

**ரி 20 போட்டிகள்**

2016ஆம் ஆண்டில் நடந்த 20 ஓவர் போட்டிகளின் எண்ணிக்கை 100. அதில் இந்திய அணி 21 ஆட்டங்களில் விளையாடி 15 இல் வெற்றி, 5 இல் தோல்வி கண்டுள்ளது. ஒரு ஆட்டத்தில் முடிவு இல்லை. 20 ஓவர் கிரிக்கெட்டில் அதிக வெற்றிகளைச் சுவைத்த அணி இந்திய அணிதான்.

8 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. தனிநபர் அதிகபட்சமாக ஆஸ்திரேலியாவின் மேக்ஸ்வெல் 145 ஓட்டங்கள் (இலங்கைக்கு எதிராக) விளாசினார்.

**அதிக சிக்சர்கள்**

சிக்சர் மன்னர்களாக டெஸ்டில் பென் ஸ்டோக்ஸ் (21 சிக்சர், 12 டெஸ்ட்), ஒரு நாள் போட்டியில் நியூஸிலாந்தின் மார்ட்டின் கப்தில் (28 சிக்சர், 17 ஆட்டம்), 20 ஓவர் கிரிக்கெட்டில் ஆப்கானிஸ்தானின் முகமது ஷாசாத் (25 சிக்சர், 15 ஆட்டம்) ஆகியோர் வலம் வருகிறார்கள்.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான தோல்வி; காரணத்தை விளக்குகிறார் மத்யூஸ்



தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் இலங்கை அணியின் தோல்விக்கான காரணத்தை அணித்தலைவர் மத்யூஸ் வெளியிட்டுள்ளார்.

இரண்டு இன்னிங்ஸிலும் இலங்கை வீரர்கள் தவறான சொட்களை தெரிவு செய்து துடுப்பாடியதே அணியின் தோல்விக்கான காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

அணித்தலைவர் மத்யூஸ் மேலும் கூறுகையில் –

தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக ஓட்டங்கள் சேர்ப்பது மிகவும் கடினம். திறமையாக செயற்பட்டாலே ஓட்டங்களைச் சேர்க்க முடியும்.

ஓட்டங்களைப் பெறுவதற்கு சில வாய்ப்புகளே உள்ளன. தளர்வான பந்து வரும் வரை வீரர்கள் காத்திருந்து துடுப்பாட வேண்டும். தென்னாபிரிக்கா வீரர்கள் சிறப்பாகப் பந்து வீசினார்கள்.

இலங்கை வீரர் மெண்டிஸ் புத்திசாலித்தனமாகத் துடுப்பாடினார். பிரச்சினையிலிருந்து அணிக்குத் திரும்பியுள்ள பந்து வீச்சாளர் சமீர முழுத் திறனில் இல்லை – என்றார்.


## சிட்னி டெஸ்டுக்கும் மிஸ்பா தான் தலைவர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவிப்பு

சிட்னி டெஸ்டில் பாகிஸ்தான் அணியின் அணித்தலைவராக மிஸ்பா உல் ஹக் செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்று விளையாடி வருகிறது. மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா 2:0 எனக் கைப்பற்றி முன்னிலையில் இருக்கிறது.

'பாக்சிங் டே' டெஸ்ட் சமநிலையில் முடியும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து யோசித்து வருகிறேன் என்று பாகிஸ்தான் அணியின் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறியிருந்தார். இவரது



கருத்தால் 3ஆம் திகதி தொடங்க இருக்கும் டெஸ்டில் அவர் பாகிஸ்தான் அணியின் தலைவராக இருப்பாரா? என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில் சிட்னி டெஸ்டில் மிஸ்பாதான் அணித்தலைவராக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊடக இயக்குனர் அம்ஜத் ஹுசைன் கூறுகையில் –

'சிட்னி டெஸ்டில் மிஸ்பா விளையாடுவார். அவர் அணியின் தலைவராகச் செயற்படுவார்'. – என்றார்.

சிட்னி டெஸ்டில் விளையாடும் மிஸ்பா அதன் பின்னர் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'அணியின் வெற்றிக்கு எனது பங்களிப்பு இல்லை என்றால், அணியில் நீடிப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லை' என்று மிஸ்பா கூறியுள்ளார்.

## 'ஸ்மித்தை வீழ்த்துவதுதான் என் இலக்கு'

*கூறுகிறார் பாகிஸ்தான் வீரர் மொஹமது இர்பான்*


ஆஸ்திரேலியாவின் ஆடுகளத்தைப் பயன்படுத்தி நல்ல நிலையுடன் இருக்கும் ஸ்மித்தை வீழ்த்துவதே என் இலக்கு என பாகிஸ்தான் வீரர் இர்பான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் உயரமான வேகப்பந்து வீச்சாளர் என்று அழைக்கப்படும் மொஹமது இர்பான் 7 அடி ஒரு அங்குலம் உயரம் கொண்டவர். இவர் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான பாகிஸ்தான் ஒருநாள் அணியில் இடம்பிடித்துள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஜனவரி 13ஆம் திகதி தொடங்குகிறது.

இது தொடர்பில் மொஹமது இர்பான் கூறுகையில் –

'நான்தான் மிகவும் அதிக உயரம் கொண்ட பந்து வீச்சாளர். பவுன்சருக்குச் சாதகமான ஆஸ்திரேலியாவின்



ஆடுகளத்தை நான் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வேன். அதன்மூலம் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித்தை வீழ்த்துவேன். ஸ்மித் தான் என்னுடைய இலக்கு.' – என்றார்.

## பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாடுவதற்கு மேற்கிந்திய தீவுகள் அணிக்கு அழைப்பு

'எங்கள் நாட்டில் வந்து இரண்டு போட்டிகள் கொண்ட ரி 20 கிரிக்கெட் தொடரில் விளையாடுங்கள்' என்று மேற்கிந்திய தீவுகளுக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடிக்கொண்டிருக்கும் போது இலங்கை வீரர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். அதன் பிறகு எந்தவொரு அணியும் பாகிஸ்தான் மண்ணில் சென்று விளையாட வில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தீவிர முயற்சியின் காரணமாக ஸிம்பாப்வே அணி மட்டும் பாகிஸ்தான் மண்ணில் சென்று விளையாடியது. இதற்கு பாகிஸ்தான் தரப்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தற்போது இரண்டு போட்டிகள் கொண்ட ரி 20 கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் மண்ணுக்கு வருமாறு



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது. இதை அந்நாட்டு கிரிக்கெட் சபையின் நிர்வாகக்குழு தலைவர் நஜம் சேதி உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் எங்களுக்கு எதிராக பாகிஸ்தான் அணி இரண்டு ரி 20 போட்டிகளில் விளையாட வேண்டும் என்று மேற்கிந்திய தீவுகள் அணி பி.சி.பிக்கு கடிதம் எழுதியிருந்தது. அதற்கு பாகிஸ்தான் அந்த கடிதத்தில் நீங்கள் எங்கள் நாட்டுக்கு வந்து இரண்டு போட்டிகளில் விளையாட வேண்டும் என்ற முன் நிபந்தனையுடன் பதில் கடிதம் அனுப்பியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் இங்கிலாந்து தொடர் மார்ச் 9ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதன்பின் மார்ச் 11 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை அவர்கள் பாகிஸ்தான் வந்து விளையாட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






*ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் 9 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டைத் தொகுதி, சித்தங்கேணியில் உள்ள ஐ. தே. க. அலுவலகத்தில் ம.விஜி தலைமையில் நடைபெற்றது. இதன்போது இந்து, கிறிஸ்தவ மதகுருமார், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது அமரர் மகேஸ்வரனின் திருவுருவப் படத்திற்கு சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.* (மு)

## ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ணக்கச் செயற்பாட்டை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் பொறிமுறைகளை அமுல்படுத்துவதற்கான காலஅவகாசம் மேலும் வழங்கப்பட வேண்டியிருக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34வது கூட்டத்தொடரானது பெப்ரவரி 27 தொடக்கம் மார்ச் 24 வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை தொடர்பான கலந்துரையாடலானது மார்ச்22ஆம்நாள்இடம்பெறும்.

இக்கலந்துரையாடல் மனித உரிமைகளுக்கானஐ.நா. உயர் ஆணையாளர் செய்ட் அல் ராட் அல் ஹுசெய்னால் இவ்வாண்டு வழங்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறும்.

நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் திருப்தி அளிக்கின்றன என செய்ட் தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இலங்கை இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன்பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாதொழிப்பதில் இலங்கை தோல்வியடைந்துள்ளதாகவும் செய்ட் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் அனைத்துலக சமூகத்தின் பங்களிப்பும்தேவையானதுஎனவும்செய்ட்சுட்டிக்காட்டியுள்ளார். நல்லிணக்கமுயற்சிகள்தொடர்பாக பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் எழும் வெறுப்புக்கள், பொறுமையின்மை, ஆதங்கங்கள்போன்றவற்றைக்களைந்து அனைத்து தரப்பினரையும் நல்லிணக்க முயற்சிகளில் ஒன்றிணைப்பதற்கான பலமான நகர்வுகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என உயர் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதில் மனிதஉரிமைகள்பேரவையின் ஊக்குவிப்பும் ஆதரவும் மிகவும் முக்கிய பங்காற்றியுள்ளன எனவும் இது அனைத்துப்பங்குதாரர்களுக்கும் குறிப்பாக பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் கொடுத்துள்ளதாகவும் செய்ட் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இவ்வாண்டு இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் செய்ட் ராட் அல் ஹுசெய்ன் உரையாற்றிய போது, இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தார். அனைத்து இலங்கையர்களும் நல்லிணக்கச் செயற்பாட்டில் வினைத்திறனுடனும்பயனுள்ளவகையிலும்பங்களிப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைதொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது செய்ட் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசாங்கம் தனது நாட்டில் அந்தத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு நீதி முறைமையில் மாற்றத்தைக்கொண்டு வரக்கூடிய முழுமையான மூலோபாயம் ஒன்றை வரைய வேண்டும் எனவும் இதன்மூலம் பல்வேறு தரப்பினரையும் பொருத்தமான வகையில் ஒன்றிணைக்க முடியும் என்றும் செய்ட் தெரிவித்திருந்தார்.

கடந்த ஆண்டு இலங்கை தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து இலங்கை அரசாங்கமானது மெதுவாகவே செயற்பட்டு வருகின்றது. எனினும் வினைத்திறன் மிக்க பொறுப்புக்கூறல் பொறிமுறையை அமுல்படுத்துவதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

ஆயினும், யுத்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்கும் செயற்பாடானது இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை என்கின்றகுற்றச்சாட்டுஇலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைக்குச் சாதகமானதொரு தீர்மானம் மனிதஉரிமைகள்பேரவையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான ஆதரவை இலங்கை அரசாங்கம் திரட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன்பின்னரும்கூடகாவற்துறையினரின் சித்திரவதைகள் இடம்பெறுவதாக இவ்வாண்டு இலங்கை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும்வெள்ளைவான் கடத்தல்கள், சித்திரவதைகள், பாலியல்வன்முறைகள் தொடர்பாக ஐ.நா வின் சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழுவானது இலங்கைக்கு நேரிற் சென்று பார்வையிட்டு சுயாதீன விசாரணை மேற்கொள்ள வேண்டும் என அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் கடந்த மாதம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஜனவரி 2015 இல் இலங்கையில் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற போதிலும் சட்ட ரீதியற்ற வகையில் இரகசியத் தடுப்பு முகாங்களில்தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்களை இலக்கு வைத்து சிறிலங்காவின் பாதுகாப்புப் படையினர்தொடர்ச்சியாகபயங்கரமானசித்திரவதைகள்மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்எனஅனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் நிறைவேற்று இயக்குனர் ஜஸ்மின் சூகா தெரிவித்திருந்தார்.

இலங்கையின் தற்போதைய சிறிசேன அரசாங்கத்தின் கீழ் இந்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அதிகாரிகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கடத்தல், சட்ட ரீதியற்ற தடுப்பு, சித்திரவதை, பாலியல் வன்புணர்வுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு தற்போது ஐரோப்பிய நாடுகளில் வாழும் 36 தமிழ் மக்களிடமிருந்து அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சாட்சியம் வழங்கியவர்களில் 10 பேரின் வழக்குகள் ஆராயப்பட்டு அவர்களுக்கு புகலிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இவர்களுக்குபுகலிடம்வழங்கப்பட்டதன் மூலம் வெளிநாட்டு அரசாங்கங்கள் இலங்கையில் மீறல்கள் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசாங்கமானது உண்மையில் தனது பாதுகாப்புத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினால், புதிதாக பரிந்துரைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் கூடுதல்அதிகாரம்வழங்கப்பட்டுள்ள காவற்றுறையினரால் இழைக்கப்படும் மீறல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனகடந்தமாதம்மனிதஉரிமைகள் பேரவையால் விடுக்கப்பட்ட அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. மனிதஉரிமைகள்பேரவையின் 30வது கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானமானது எவ்வித வாக்கெடுப்புமின்றிநிறைவேற்றப்பட்டது. நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றைசிறிலங்காவில் மேம்படுத்துதல் என்கின்ற தலைப்பின் கீழ் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அக்காலப்பகுதியில்ஜெனீவாவில் அங்கம் வகித்த அமெரிக்கக்குழுவால்பேரவையில்தீர்மானம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டு டொனால்ட் ட்ரம்ப்பின் தலைமையிலானஅமெரிக்கஅரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவே மனிதஉரிமைகள்பேரவையின் கூட்டத் தொடரில் அங்கம் வகிக்கும்.

மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ட்ரம்ப் அரசாங்கத்துடன் பணியாற்றுவதற்கான தனது கதவுகளை இலங்கை ஏற்கனவே திறந்துவிட்டுள்ளது. அமெரிக்காவின் துணை அதிபராகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மைக் பென்ஸ் தொலைபேசி மூலமாக அதிபர் மைத்திரிபால சிறிசேனவுடன் தொடர்புகொண்டு அமெரிக்கா – இலங்கையின் எதிர்கால உறவு தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார்.

அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் ஆட்சியின் கீழ் அமெரிக்கா – இலங்கை உறவுகளை மேலும் எவ்வாறு பலப்படுத்துவது என்பது தொடர்பாகவே பென்சும் அதிபர் சிறிசேனவும் தொலைபேசியில்உரையாடினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ட்ரம்ப் மற்றும் சிறிசேனவிற்கு இடையில் விரைவில் சந்திப்பொன்றை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிக்கின்றனர் என அமெரிக்கத்துணைஅதிபராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள பென்ஸ், அதிபர் சிறிசேனவிடம் தெரிவித்திருந்தார்.

(நன்றி – 'புதினப் பலகை' மொழிபெயர்ப்பு – நித்தியபாரதி,)

## பொருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் உயர் மட்ட அரசியல் தலைவர்களும் பொருத்து வீட்டுத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அவை பொருத்தமற்ற இரும்புக் கூடுகள் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் மாகாண சபைகளிலும் இந்த வீடுகளை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாத காலத்தில் மீள்குடியேற்ற அமைச்சு விவாதத்தின் போது இவ் வீட்டுத்திட்டத்திற்கான ஒப்பந்த விதி முறைகள் மீறப்பட்டுள்ளமை, ஊழலுக்கு இடமளிக்கப்பட்டுள்ளமை, மோசடிக்குள்ளானவர்களுடன் உள்ள ஒப்பந்தம், உடன்பாடுகளை சுட்டிக்காட்டிய சுமந்திரன் எம்.பி. இதனைச் செயற்படுத்த முனையும் மீள்குடியேற்ற அமைச்சின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் எனது தலைமையில் உள்ள மீள் குடியேற்ற அமைச்சு உள்ளிட்ட மேற்பார்வைக் குழுவில் இத் திட்டம் வேண்டாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி இந்த விடயத்தில் தலையிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் எனவும்வடக்குகிழக்கின்அபிவிருத்திப் பணிகளுக்கும் கூடுதலான நிதி ஒதுக்குவார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குறுதியளித்திருந்தார். என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் வழங்கிய மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் வீட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டுத் தீர்வுகாணும் வாக்குறுதி முன்னெடுக்கப்படுமுன், அமைச்சர் பொருத்துவீட்டுக்கு விளம்பரம் செய்வது தவறானதாகும்.

ஏன் இவ்வளவு அவசரம்? அமைச்சர் சுவாமிநாதனின் விசுவாசிகளும், முகவர்களும், அரச அதிபர்களையும் பிரதேச செயலாளர்களையும், ஊழியர்களையும் மிரட்டி அச்சுறுத்தி பொருத்து வீடுகளை ஏற்க வேண்டுமெனப்பேசுகின்றசெய்திகளும் கசிந்து இருக்கின்றன.

மீள்குடியேற்ற அமைச்சு, வீடு தேவைப்பட்டவர்களுக்கு கல் சீமெந்து வீடுகளை பத்து இலட்சம் ரூபாயில் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை முறையாக செயற்படுத்துவதே இன்றைய தேவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்திப் பொருத்தமான தீர்மானங்களை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகின்றோம். அமைச்சர் சுவாமிநாதன் மீள் குடியேற்ற அமைச்சில் ஓராண்டுக்குள் இரண்டு அமைச்சின் செயலாளர்கள் துரத்தப்பட்டுள்ளனர். அமைச்சுக்கு இன்னும் ஒரு செயலாளரைக்கூட நியமிக்க முடியவில்லை. அரசு செயலா ளர் தரமுள்ளவர்கள் இந்த அமைச்சுக்கு வரமறுக்கின்றனர்.

இந்நிலையில் இப் பொருத்து வீட்டுத் திட்டத்தை இருபத்தொரு இலட்சத்திலிருந்து பதினாறு இலட்சமாக குறைத்து அமைச்சர் சுவாமிநாதன் விளம்பரம் பிரசுரித்து ஒப்பேற்ற எடுக்கும் நடவடிக்கையில் மறைந்திருக்கும் மர்மம் தான் என்ன? இத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்று கேள்வி எழுப்புகிறோம்.

போரினால்அழிந்துபோயுள்ள வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு கல் சீமெந்தினால் கட்டப்பட்ட ஒரு இலட்சத்து முப்பதினாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் தேவை.

எனவே பொருத்து வீட்டு விண்ணப்பங்களை வீட்டுத் தேவையுள்ள மக்கள் நிராகரித்து கல் வீடுதான்வேண்டுமெனஅமைச்சுக்கு, அதிகாரிகளுக்கு எழுதிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மக்களின் வீட்டுத் தேவையை நிறைவு செய்ய அமைச்சரின்தவறானவழிநடத்தலுக்குப் பலியாகிப் பின் மன வருத்தப்பட வேண்டாமென வேண்டுகோள்விடுக்கின்றோம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்விடயத்தில் பிரதமரின் சார்பில் பணிகளை முன்னெடுப்பவருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அரசின் முறைமையும், அரசாங்கத்தின் வடிவமும் – கூட்டமைப்பும், அதிகாரப்பகிர்வின் அடிப்படைகள், மதம், தேர்தல் சீர்திருத்தம் மற்றும் காணி விவகாரம் ஆகிய முக்கியமான அடிப்படை விடயங்கள் குறித்தே அரசமைப்பு வழிகாட்டல் குழு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியதாக இருக்கின்றது என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வேலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்றது. அதற்கு முந்திய ஒரு வாரத்தில் மூன்று கட்டங்களாக இத்தொகை செலுத்தப்பட்டிருக்கின்றது.

டிசெம்பர் 30ஆம் திகதி ரூபா 99 கோடி 85 லட்சமும் –

ஜனவரி 6ஆம் திகதி ரூபா இருநூறு கோடியும் –

அதற்கு அடுத்த நாள் நூறு கோடி 31 லட்சமும் –

மேற்படி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சின் உயரதிகாரிகளைபொலிஸாரின் நிதிக் குற்றவியல் அதிகாரிகள் துளைத்தெடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலைமை இருக்கையில் –

பழைய கொடுப்பனவைப்பற்றி எதுவுமே குறிப்பிடாமல், மேற்படி திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் அதற்காக சீனாவின் 'எக்ஸிம்' வங்கியிடம் இலகு கடன் பெறும் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும்அனுமதிகோரி தற்போதைய நீர்வள முகாமைத்துவ அமைச்சரினால் ஓர் அமைச் சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது என்றுநிதி அமைச்சர் விசனத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ரூ. 8 ஆயிரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமியின் ஒப்பத்துடனேயே வெளிவரவுள்ளன.

குமாரசாமி தமிழில் ஒப்பமிட்டால் உலகிலேயே தமிழ் கையொப்பத்துடன்வெளிவரும் நாணயத்தாள் என்ற பெருமை கிடைக்கும்என்றுதமிழ்ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனாலும் குமாரசாமியின் பேச்சு மொழி ஆங்கிலம் என்பதால் புதிய நாணயத்தாள்களில் என்ன மொழியில் ஒப்பமிட்டார் என்பதை நாணயத்தாள்கள் புழக்கத்திற்கு வந்த பின்னரே அறியமுடியும்என்றும்அவர்கள் தெரிவித்துள்ளனர். (மு)

காலைக்கதிர்
Kalaikkathir

# 8.3 கிலோ தங்கத்தைக் கடத்தியவரை தமிழ் நாட்டில் தேடி மடக்கினராம்!

இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் 8.3 கிலோகிராம் தங்கத்தைக் கடத்திச் சென்ற நபர் ஒருவர் தமிழ் நாட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சுங்க மற்றும் வருமான வரித்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

முஜ்புர் ரஹ்மான் என்ற 31 வயதுடைய நபரே இந்தத் தங்கக் கடத்தலில் ஈடுபட்டார் என்றும் அவரிடமிருந்து 8.3 கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட தங்கம் இந்தியப் பணத்தில் சுமார் இரண்டரைக் கோடிரூபா மதிப்புடையது என்று பொலிஸார் கூறினர். சந்தேக நபர் கடத்தலுக்காகப் பயன்படுத்திய கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளை சென்னை சுங்க மற்றும் வருமான வரித்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ள நிவாரணம் எனக் கூறி மோசடியான முறையில் நிதி சேகரிப்பு

## நல்லூர் பிரதேச செயலர் எச்சரிக்கை

நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் வெள்ள நிவாரண நிதி என்கிற போர்வையில் சிலரால் பணம் சேகரிக்கப்பட்டு வருவதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என பிரதேச செய லர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் சம்பந்தமாக மாவட்டச் செயலகமோ அல்லது நல்லூர் பிரதேச செயலகமோ எவ்வாறான நிதி சேகரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இவ்வாறு நிதி சேகரிப்போர் தொடர்பாக பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்குமாறும் இவர்கள் தொடர்பாக தகவல்கள் தெரிந்தால் தமக்கோ அல்லது பொலிஸாருக்கோ தெரியப்படுத்துமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் பைஸர் அவசரமாக நாடு திரும்புகிறார்

வெளிநாடு சென்றிருந்த - மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா - அவசரமாக நாடு திரும்புகிறார் என நேற்று சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் பிரயங்கர ஜெயரத்ன தனது பதவியை இராஜினாமாச் செய்து கூட்டு எதிரணியுடன் இணையத் தயாராகியமையை அடுத்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகளைத் தொடர்ந்தே அமைச்சர் பைஸர் முஸ்தபா தாயகம் விரைகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான உறவு முறுகல் கட்டத்தை அடைந்துள்ள சூழலிலேயே ஜனாதிபதியின் ஆலோசகரான பைஸர் முஸ்தபாவின் கொழும்புப் பிரசன்னம் அவசரமாகத் தேவைப்படுவதாகக் கூறப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளில் எல்லை நிர்ணயம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ள பின்னணியில் அந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராகவும் பைஸர் முஸ்தபா இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சூழ்ச்சியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின் சார்பில் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மனநிறைவடைகின்றேன். மலரும் 2017ஆம் ஆண்டு ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சாதகமான வாய்ப்புக்களை உருவாக்கித் தரும் என்ற நம்பிக்கையுடன் இப் புத்தாண்டை வரவேற்றுக் கொள்வோமாக!

கடந்து சென்ற 2016ஆம் ஆண்டு அனைத்துலக ஒழுங்கில் ஏற்படக்கூடிய சில மாற்றங்களைக் கோடு காட்டிச் சென்றுள்ளது. மேற்குலக நாடுகளில் மக்கள் உணர்வுகளைத் தட்டிவிடும் புதியதொரு தேசியவாதம் வளர்ச்சி அடைந்து வருவதை, பிரித்தானிய மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்குச் சாதகமாக வாக்களித்தமையும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலும் வெளிப்படுத்திநிற்கின்றன. உலக விவகாரங்களை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் மட்டும் தான் நினைத்தவாறு இனியும் கையாள முடியாது என்பதை சிரியப்போர் சுட்டிக்காட்டியுள்ளது. உலக அரசியல் ஒழுங்கு ஒற்றைமைய அரசியல் ஒழுங்கிலிருந்து விலகி பல்மைய அரசியல் ஒழுங்கை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதும் புலப்படுகிறது. இப் பல்மைய உலக ஒழுங்கு தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஒற்றை மைய உலக ஒழுங்கை விடச் சாதகமான வாய்ப்புக்களைத் தரக் கூடியதென நாம் கொள்ளலாம். இது குறித்து நாம் விரிவாக ஆய்வு செய்யவேண்டியதும் அவசியம்.

### சவால் மிக்க ஆண்டு

2017 ஆம் ஆண்டு ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு சவால் மிக்க ஆண்டாக அமையும் என்றே நாம் கருதுகிறோம். இந்த ஆண்டில் பல சூழ்ச்சிகரமான செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்கப் போகிறது. இச் சூழ்ச்சியை நாம் தாயகம், தமிழகம் மற்றும் உலகம் அனைத்தும் வாழும் தமிழ் மக்களுடனும் நீதிக்காகக் குரல் கொடுக்கக்கூடிய அனைத்துலகச்சமூகத்துடனும் இணைந்து முறியடித்தாக வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி சிறிசேன புதிய அமெரிக்க அதிபராகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப்புக்கு எழுதிய கடிதத்தில் இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டிருக்கும் போர்க் குற்றச்சாட்டுக்களைக் கைவிடுமாறு கோரியிருக்கிறார். இது நல்லாட்சி என்றுதம்மை அழைத்துக் கொள்ளும் தற்போதய இலங்கை அரசு நீதி குறித்தும் அறம் குறித்தும் கிஞ்சித்தும் அக்கறையற்ற சிங்கள, பௌத்த பேரினவாத அரசாகவே இருக்கிறது என்பதனைத் தெளிவாக்கியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் இலங்கை எடுத்துக் கொண்ட பொறுப்பு, காலத்தை இழுத்தடித்து நீதியைக் குழிதோண்டிப் புதைக்கும் உள்நோக்கம் கொண்டது என்பதை இலங்கை அரசின் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன. இதுநீதிகோரும் முயற்சிக்கு இலங்கை அரசு விடுக்கும் சூழ்ச்சியுடன் கூடிய சவாலாகும். இதனை முறியடிக்க வேண்டியது 2017 இல் நம் முன்னால் உள்ள முக்கிய கடமையாகும்.

### அடுத்த சவால்

2017 இல் நாம் எதிர் கொள்ளும் அடுத்த சவால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் எவற்றையும் பூர்த்தி செய்யாத அரசியல் ஏற்பாடுகளைக் கொண்ட புதிய அரசமைப்புக்கு தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளும் சிங்களத்தின் சூழ்ச்சித் திட்டத்தை முறியடிக்க வேண்டியதாகும்.

இலங்கை தனது நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கவுள்ள திட்டத்தின்படி தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதோ, தேசிய இனம் என்பதோ, இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்குப் பகுதி தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பதோ அல்லது தமிழ் மக்கள் தேசிய சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதோ அங்கீகரிக்கப்படவில்லை. இதன்படி வடக்கு, கிழக்கு இணைக்கப்படப்போவதில்லை. மத்தியில் குவிக்கப்பட்ட அதிகாரங்கள் கவர்ச்சியான வார்த்தைஜாலங்களுடன் மாகாணங்களுக்குக் கிள்ளித் தெளிக்கப்படவுள்ளன. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கிஞ்சித்தேனும் எட்ட முடியாத ஒரு திட்டமாகத்தான் புதிய திட்டம் அமையப்போகிறது எனத் தெரிகிறது.

### தமிழரைத் தோற்கடிக்கும் சிங்களத்தின் எத்தனம்

புதிய அரசமைப்பைத் தமிழ் மக்களின் சம்மதத்துடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்க சிங்களம் முயல்கிறது. நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படக்கூடிய புதிய அரசமைப்பின் மீதான வாக்கெடுப்புக்குத் தமிழ் மக்களின் ஆதரவான வாக்குகளைப் பெறும் முயற்சி சூழ்ச்சித்தனத்துடன் மேற்கொள்ளப்படக் கூடியதொன்றாகும். இவ்வாக்களிப்பில் தமிழர் தேசத்துக்கு இருக்கக்கூடிய சவால், சிங்கள அரசின் சூழ்ச்சியை மறைத்து புதிய அரசமைப்பைத் தமிழர்களுக்கு நன்மை தரக் கூடிய அரசமைப்பு என எமது தமிழர் தலைவர் சிலரும் கூறக் கூடிய ஆபத்து இருப்பதாகும்.

மஹிந்த ராஜபக்ஷவும் அவரது கூட்டாளிகளும் இப் புதிய அரசமைப்பை எதிர்க்கின்றனர். நாம் அதனை முறியடிக்க வேண்டுமெனவும் இத்தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துக் கூறக்கூடும். இப் புதிய அரசமைப்புத் திட்டத்துக்கு தமிழ் மக்களின் சம்மதம் உண்டு எனக் காட்டும் சூழ்ச்சி நோக்கத்தைச் சிங்களம் கொண்டுள்ளது. இதற்குத் தமிழ்த் தலைவர்கள் துணைபோகாது தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பும் புதிய ஆண்டின்போது தமிழ் மக்களின் கைகளிலுள்ளது.

தமிழ் மக்கள் புதிய அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களிப்பார்களாயின் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது மிகுந்த சவாலுக்குரியதாகி விடும். வடக்கு - கிழக்கு நிரந்தரமாகவே பிரிந்து விடும். தமிழர் தேசம் சிங்களத்தின் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்குள் சிக்கி மெல்ல மெல்ல அடையாளம் இழந்து அழிந்துபோகும் நிலை காலப்போக்கில் உருவாகும் ஆபத்து ஏற்படும். தமிழ் மக்கள் இவ் விடயத்தில் மிகவும் விழிப்புடன் இருந்து சிங்களத்தின் சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும். புதிய அரசமைப்பை முன்வைத்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் சிங்களத்தின் சூழ்ச்சியை முறியடிக்கும் தீர்க்கமான பாத்திரம் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு உள்ளது. அதனை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

### தமிழ் மக்களின் ஆதரவு தேவை

2017ஆம் ஆண்டு இலங்கை அரசு முன்னெடுக்கக்கூடிய சூழ்ச்சிகரமான திட்டங்களை முறியடிப்பதற்கான செயற்பாடுகளில் நாடுகடந்த தமிழீழ அரசு தீவிரமாக ஈடுபடவுள்ளது. அனைத்துலக சமூகத்தின் முன் நீதி கோரும் நடைமுறையைப் பலப்படுத்தவும் இலங்கை அரசு புதிய அரசமைப்பின் ஊடாக மேற்கொள்ளக்கூடிய சூழ்ச்சியை அம்பலப்படுத்துவதற்கும் உரிய செயற்பாடுகளிலும் நாடு கடந்த தமிழீழ அரசு கவனம் செலுத்தும். எமது இந்த முயற்சிக்கு உலகளாவிய அளவில் தமிழ் மக்களின் ஆதரவை நாம் கோரி நிற்கிறோம்.

தம்மை நல்லாட்சி எனக் கூறிக்கொள்ளும் தற்போதய இலங்கை அரசுக்கும் முந்திய ராஜபக்ஷ அரசுக்கும் இடையே தமிழீழ மக்களின் அரசியல் உரிமைகள் குறித்த விடயத்தில் அடிப்படை வேறுபாடுகள் எவையும் இல்லை. அவர்கள் நேரடியாகவே உரிமைகளைத் தரமுடியாது என்பார்கள். இவர்கள் இனவாதிகளின் எதிர்ப்பைக் காரணம் காட்டித் தர முடியாது என்பார்கள். அவ்வளவுதான். ஆனால் இவர்களின் அரசோ இனவாதிகளால் நிரம்பிக் கிடக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை நல்லாட்சி என்பதும் இலங்கை அரசு தரும் என எதிர்பார்க்கும் அரசியல்தீர்வு என்பதும் மாயமான்கள்தான் என்ற உண்மை 2017 ஆம் ஆண்டில் அம்பலமாகும் என நாம் உறுதியாக நம்புகிறோம். இது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குச் சாதகமான நிலையை உருவாக்கித் தரக் கூடியது என்ற நம்பிக்கையுடன் எமது பணிகளை முன்னெடுத்துச் செல்வோமாக!

- என்று உள்ளது.

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது எனத் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பு, அமெரிக்காவின் புதிய துணை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மைக் பென்ஸின் ஏற்பாட்டில் எதிர்வரும் மார்ச் மாத ஆரம்பத்தில் இடம்பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அந்நாட்டின் துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மைக் பென்ஸ் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தார்.

இதன்போது டொனால்ட்ட்ரம்ப் ஆட்சியின் கீழ் இருதரப்பு உறவுகளை மேலும் எவ்வாறு வலுப்படுத்துவது என்பது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அமெரிக்க துணை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைக் பென்ஸ் கலந்துரையாடியிருந்தார். இதன்போதே இருதரப்புச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை செய்வார் என அவர் ஜனாதிபதிக்கு தெரிவித்திருந்தார்.

மனிதவுரிமைகள் விவகாரம் தொடர்பில் டொனால்ட் ட்ரம்ப்பின் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற தான் தயாராக இருக்கிறார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அறிவித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்காவின் சார்பில் டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவே கலந்துகொள்ளவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# நிதி அமைச்சருக்கு எதிரான முறைப்பாடு

கொழும்பு .ஜன .02

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைத் தாங்கள் செய்யவுள்ளனர் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்றில் சேவையாற்றி வந்த நிதிஅமைச்சர் அரசியலில் ஈடுபட்ட பின்னர் பெரும் சொத்துகளுக்கு அதிபதியாகி இருக்கிறார் எனவும், வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்துள்ளார் எனவும் நாளை தாங்கள் முறைப்பாடு செய்யவுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# பனை மரம் தறித்த இருவர் கைது!

உடுப்பிட்டி, ஜன.02

வதிரி வீதி உடுப்பிட்டி பகுதியில் பனை மரங்களைத் தறித்த இருவரை நேற்று முன்தினம் வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதான இருவரும் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

தகவல் ஒன்றை அடுத்து சிவில் உடையில் சென்ற குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணை மேற்கொண்ட போது அனுமதிப்பத்திரம் இன்றி பனை மரங்கள் தறித்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

கைதான இருவருக்கும் எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.